முச்சந்தி முரளி



"பணம் பாதாளம் மட்டும் பாயும் டிப்பர் பாலம் தாண்டியும் பாயும்"

Registered as a Newspaper

பக்கங்கள் – 12

விலை – ரூபா 50

# உதயன்

சுடர் : 39
கதிர் : 328

சனிக்கிழமை
19 ஒக்ரோபர் 2024

ஐப்பசி 02 ஆம் நாள்
வள்ளுவர் ஆண்டு 2055

# நாடாளுமன்றத் தேர்தல் ஏற்பாடுகள் முழுமை!



## தேர்தல்கள் ஆணைக்குழு அறிவிப்பு

**கொழும்பு, ஒக்ரோபர் 19**

**ஸ்ரீலங்கா நாடாளுமன்றத் தேர்தலுக்கான அனைத்து ஏற்பாடுகளும் நிறைவடைந்துள்ளதாக தேர்தல்கள் திணைக்களம் அறிவித்துள்ளது.**

11

## சிறப்புத் தேவையுடையவர்கள் வாக்களிக்க உதவியாளர்கள்

கொழும்பு, ஒக். 19

பொதுத்தேர்தலின்போது விசேட தேவையுடைய வாக்காளர்களுக்கு வாக்கெடுப்பு நிலையத்தில் வைத்து வாக்குச் சீட்டினை அடையாளமிடுவதற்கு உதவியாளர் ஒருவரை அழைத்துச் செல்ல சட்ட விதிகள் அமைக்கப்பட்டுள்ளதாக தேர்தல்கள் ஆணைக்குழு தெரிவித்துள்ளது.

இது தொடர்பில் தேர்தல்கள் ஆணைக்குழு விடுத்துள்ள அறிவிப்பில்;

11

## வன்னி மாவட்டத்துக்கான தேர்தலை இடைநிறுத்துக

### உயர் நீதிமன்றில் மனுத்தாக்கல்

முல்லைத்தீவு, ஒக். 19

வன்னி மாவட்டத்துக்கான வாக்கெடுப்பை இடைநிறுத்துமாறு கோரி, உயர் நீதிமன்றத்தில் மனுத்தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

வன்னி தேர்தல் மாவட்டத்தில் ஜனநாயக தேசிய கூட்டணியின் சார்பில் தாக்கல் செய்யப்பட்ட வேட்புமனுவை நிராகரிப்பதற்கு மாவட்ட தெரிவத்தாட்சி அதிகாரி மேற்கொண்ட தீர்மானத்தை

11

## காணாமலாக்கப்பட்டோரின் உறவினரிடம் விசாரணை!

கிளிநொச்சி, ஒக். 19

காணாமல் போனவர்கள் தொடர்பான அலுவலகத்தால் கிளிநொச்சி மற்றும் முல்லைத்தீவு மாவட்டங்களைச் சேர்ந்த காணாமலாக்கப்பட்டோரின் உறவினர்கள் 30 பேரிடம் நேற்று விசாரணைகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன.

காணாமற்போன ஆட்கள் தொடர்பான

11

## மின்சாரம் தாக்கி ஒருவர் உயிரிழப்பு

யாழ்ப்பாணம், ஒக். 19

கோவில் ஒலிபெருக்கி அறையில், மின்சாரம் தாக்கியதில் இளம் குடும்பத்தலைவர் ஒருவர் உயிரிழந்துள்ளார். நடராஜன் துஷ்யந்தன் (வயது-35) என்பவரே இவ்வாறு உயிரிழந்தவராவார்.

11

## சிசுவொன்று மர்மச் சாவு

யாழ்ப்பாணம், ஒக். 19

சளி காரணமாக யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையில் சிகிச்சைக்குச் சேர்க்கப்பட்ட சிசுவொன்று உயிரிழந்துள்ளது.

பிறந்து 45 நாள்களேயான துஸ்யந்தன் தன்சியா என்ற பச்சிளம் சிசுவே, நேற்றுமுன்தினம் மருத்துவமனையில் சேர்க்கப்பட்ட நிலையில் நேற்று உயிரிழந்துள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது. இறப்புக்கான காரணம் தொடர்பில்

11



உயரம் பாய்தலில்

## மகாஜன மாணவன் தங்கம்

கொழும்பு, ஒக். 19

கொழும்பு சுகததாஸ விளையாட்டரங்கில் நேற்று நடைபெற்ற தேசிய மட்ட தடகளப் போட்டியில்

11

கேரதீவு – சங்குப்பிட்டிப் பாலத்தில்

## கனரக வாகனங்களுக்கு 3 நாள்களுக்குத் தடை!

விரிவு பக். 4 இல்

பளையில் நேற்று

## மதுபானசாலைக்கு எதிராகப் போராட்டம்

பளை, ஒக். 19

பளை - முல்லையடிப் பகுதியில் மதுபானசாலை அமைப்பதற்கு எதிர்ப்புத் தெரிவித்து நேற்றுப் போராட்டம் இடம்பெற்றுள்ளது.

11

சங்குப்பிட்டிப் பாலத்தில் நேற்று

## மக்களுக்கு ஒரு நீதி; டிப்பருக்கு ஒரு நீதியா?

### கடும் அதிருப்தியில் பொதுமக்கள்

யாழ்ப்பாணம், ஒக். 19

கேரதீவு - சங்குப்பிட்டிப் பாலத்தில் நேற்று இரவு மணல் ஏற்றியவாறு டிப்பர்கள் பயணித்துள்ளன என்று பொதுமக்கள் ஆதாரபூர்வமாக குற்றஞ்சாட்டியுள்ளனர்.

11

## பனை அபிவிருத்திச்சபையின் தலைவராக இரேனியஸ் செல்வின்

### உறுப்பினர்களும் வரவேற்பு

யாழ்ப்பாணம், ஒக். 19

பனை அபிவிருத்திச்சபைக்கு புதிய தலைவராக இரேனியஸ் செல்வின் நியமிக்கப்பட்டுள்ளார். இதற்கு யாழ்ப்பாணம் மாவட்ட பனை அபிவிருத்திச்சபையின் உறுப்பினர்கள் தமது வரவேற்பைத் தெரிவித்துள்ளனர்.

11

## பல்கலைக்கழக மானியங்கள் ஆ.குழுவில் மருத்துவ நிபுணர் பேராசிரியர் ரவிராஜ்

கொழும்பு, ஒக். 19

யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையின் சத்திரசிகிச்சை நிபுணரும், யாழ்ப்பாணப் பல்கலைக்கழக முன்னாள் மருத்துவபீடப் பீடாதிபதியுமான பேராசிரியர் சுப்பிரமணியம் ரவிராஜ் பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு உறுப்பினராகத் தெரிவு செய்யப்பட்டுள்ளார்.

பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் நியமனங்கள் நேற்று வழங்கப்பட்டுள்ளன. இதில் ஓர் உறுப்பினராக மருத்துவக் கலாநிதி பேராசிரியர் சுப்பிரமணியம் ரவிராஜ் உள்வாங்கப்பட்டுள்ளார்.

இதன்

11



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அரசியல் பகடைகளாக முன்னாள் போராளிகள்

## முன்னாள் போராளிகளைக் கொண்ட சுயேச்சைக் குழு ஆதங்கம்

**வவுனியா,ஒக்.19**
**எங்களை வைத்து வியாபாரம் செய்வதே அரசியல்வாதிகளின் நோக்கமாக இருக்கின்றது. நாங்கள் அநாதைகளாக்கப்பட்ட நிலையிலேயே தற்போது உள்ளோம்.**

-இவ்வாறு முன்னாள் போராளிகள் மற்றும் மாற்றுத்திறனாளிகளைக் கொண்டு சுயேச்சையாகக் களமிறங்கியுள்ள குழு தெரிவித்துள்ளது.
வவுனியாவில் இடம்பெற்ற ஊடக சந்திப்பில் அவர்கள் மேலும் தெரிவிக்கையில்-
எதிர்வரும் நாடாளுமன்றத்தேர்தலில் முன்னாள் போராளிகள் மற்றும் மாற்றுத்திறனாளிகளைக் கொண்ட சுயேச்சைக்குழுவானது அரிக்கன் இலாம்புச் சின்னத்தில் போட்டியிடுகின்றது. வன்னியில் அவயவங்களை இழந்த பல போராளிகள் உள்ளனர்.
அன்றாட உணவுக்கே அவர்கள் சிரமப்படும் நிலை ஏற்பட்டுள்ளது. தற்போதைய தமிழரசியல்வாதிகள் தங்கள் அரசியல் தேவைகளுக்காக முன்னாள் போராளிகளை வைத்து குளிர்காய்கின்றனர்.
அநாதைகளாக உள்ள எங்களை இந்த அரசியல்வாதிகள் யாருமே கண்டுகொள்வதில்லை.
எம்மை வைத்து வியாபாரம் செய்வதே அவர்களது நோக்கம். எமது தேவைகளைப்பூர்த்திசெய்வதற்காக இந்தத் தேர்தலில் நாம் நிற்கின்றோம் - என்றனர். (ச-110)

## முன்னாள் ஜனாதிபதிகள் நிரந்தரமாக ஓய்வெடுங்கள்

கொழும்பு, ஒக். 19
முன்னாள் ஜனாதிபதிகள் தற்காலிகமாக ஓய்வுபெறுவதைவிட நிரந்தரமாக ஓய்வு பெறுவது நல்லது என ஐக்கிய மக்கள் சக்தியின் நாடாளுமன்ற முன்னாள் உறுப்பினர் எரான் விக்கிரமரத்ன தெரிவித்துள்ளார்.
முன்னாள் ஜனாதிபதி மஹிந்த அரசியலிலிருந்து தற்காலிகமாக ஓய்வு பெறப்போவதாகத் தெரிவித்தமை தொடர்பாக ஊடகவியலாளர்களின் கேள்விக்குப் பதிலளிக்கையிலேயே மேற்கண்டவாறு கூறினார்.
அவர் மேலும் தெரிவித்ததாவது-
மஹிந்த மட்டுமல்ல ரணிலும் ஓய்வுபெறுவது நல்லது. இவர்கள் இளைய தலைமுறையினருக்கு வழிவிடவேண்டும். மக்கள் நாட்டுக்கு தலைமை தாங்குவதற்கு இவர்களுக்குச் சந்தர்ப்பம் வழங்கியுள்ளனர். இவர்கள் மக்களுக்கு ஏதாவது செய்ய விரும்பியிருந்தால் தமது பதவிக்காலத்தில் அதை செய்திருக்கலாம் - என்றார். (ஒ-6)

## தமிழரசுக்குள் பிளவு வெறும் புரளி

### சிறீதரனுடன் கசப்பில்லை சுமந்திரன் தெரிவிப்பு



கொழும்பு,ஒக்.19
தமிழரசுக் கட்சிக்குள் பிளவு என்பது திட்டமிட்டு பரப்பப்படும் புரளியாகும். சிறீதரனுடன் இணைந்தே ஒரே தேர்தல் மாவட்டத்தில் போட்டியிடுகின்றோம் எனத் தமிழரசுக் கட்சி வேட்பாளர் ஜனாதிபதி சட்டத்தரணி எம்.ஏ. சுமந்திரன் தெரிவித்துள்ளார்.
அவர் மேலும் தெரிவிக்கையில்,
அண்மையில் கட்சியின் சிரேஷ்ட உறுப்பினர்களுடன் சந்தித்த போது எல்லோரும், கட்சி இரண்டு அணிகளாக பிளவுபட்டிருப்பதானது மக்களிடையே கட்சி தொடர்பில் அதிருப்தி ஏற்பட்டு வருவதாகத் தெரிவித்தனர்.
கட்சிக்குள் பிளவு என்பது திட்டமிட்டு பரப்பப்பட்டு வரும் புரளியாகும். கட்சிக்குள் பிளவு இல்லை என்பதற்கு சி.சிறீதரனும் நானும் உள்ளோம் என்பது எடுத்துக்காட்டு.
நாங்கள் ஒரே தேர்தல் மாவட்டத்தில் வேட்பாளர்களாக உள்ளோம். புதியவர்களுக்கு வாய்ப்பு வழங்கியதன் மூலம் ஒரே நபர்களே மீண்டும் மீண்டும் வேட்பாளர்களாகும் நிலையை மாற்றியுள்ளோம். யாழ்ப்பாணத்தில் இம்முறை போட்டியிடும் 44 தரப்புகளில் எமது கட்சியின் வேட்பாளர் அணியே மிகவும் தகுதியானதாகும்
அதேவேளை கடந்த தேர்தலில் 3 சதவீத வாக்குகளை பெற்ற ஒரு கட்சி இந்தத் தேர்தலில் 45 சதவீத வாக்குகளைப் பெற்று ஆட்சியைப் பிடித்திருப்பது உண்மையில் அதிசயிக்கத்தக்க மாற்றமாகும் - என்றார். (ச-100)

## அதிமேதகு, மாண்புமிகு பயன்படுத்த வேண்டாம்

### அநுர கோரிக்கை

கொழும்பு, ஒக். 19
தன்னை அதிமேதகு ஜனாதிபதி, மாண்புமிகு ஜனாதிபதி என்றெல்லாம் விளிப்பதை ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க விரும்பவில்லை என அவருக்கு நெருக்கமான வட்டாரங்களில் இருந்து அறியமுடிகின்றது.
பதவிநிலை கருதி ஜனாதிபதியென அழைத்தால் போதும் என அதிகாரிகளிடம்கூட ஜனாதிபதி கூறியுள்ளார் எனத் தெரியவருகின்றது.
அத்துடன், தேசிய மக்கள் சக்தி செயற்பாட்டாளர்கள், ஜனாதிபதியை தோழர் என்றே அழைக்கின்றனர் எனவும் அறியமுடிகின்றது.
அதேவேளை ஜனாதிபதிக்குரிய சலுகைகளை பயன்படுத்துவதை முடிந்தளவுக்கு ஜனாதிபதி அநுரகுமார தவிர்த்துவருகின்றார் எனவும் கூறப்படுகின்றது. (ஒ-44)

## அரச சொகுசு வீடுகளை கையளிக்காத 14 பேர்!

கொழும்பு, ஒக்.19
முன்னாள் அமைச்சர்கள் 14 பேர் அரசுக்குரிய உத்தியோகபூர்வ வதிவிடங்களை இன்னும் கையளிக்கவில்லை. அதற்கமைய அவற்றை விரைவில் மீளக் கையளிப்பதற்கு நடவடிக்கை எடுக்குமாறு உள்துறை அமைச்சால் நினைவூட்டல் கடிதம் அனுப்பிவைக்கப்பட்டுள்ளது.
வீடுகளைக் கையளிப்பதற்கு முன்னர் மின்சாரம் மற்றும் நீர்க்கட்டணம் உள்ளிட்ட நிலுவைக் கொடுப்பனவுகளை முழுமையாக செலுத்தி முடிக்கவேண்டும்.
அறிவித்தல் விடுக்கப்பட்டும் வீடுகளைக் கையளிக்காத, கட்டணங்களைச் செலுத்தாத முன்னாள் அமைச்சர்களுக்கு எதிராக சட்டநடவடிக்கை எடுக்கப்படும் என்றும் அறிவுறுத்தப்பட்டுள்ளது. அதேவேளை ரணில் விக்கிரமசிங்கவின் ஆட்சிக்காலத்தில் 28 முன்னாள் அமைச்சர்களுக்கு அரசின் உத்தியோகபூர்வ வதிவிடங்கள் வழங்கப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. (ச-44)



## ஐ.தே.க.உறவாலே மொட்டு கருகியது!

### நாமல் ஆதங்கம்

கொழும்பு, ஒக்.19
ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன கட்சிக்கு ஏற்பட்ட பின்னடைவுக்கு, ஐக்கிய தேசியக் கட்சியுடன் கூட்டணி வைத்தமையும் பிரதான ஒரு காரணமாகும் என்று மொட்டுக் கட்சியின் தேசிய அமைப்பாளர் நாமல் ராஜபக்ச தெரிவித்துள்ளார்.
அவர் மேலும் தெரிவிக்கையில்,
ஜனாதிபதித் தேர்தலின்போது எமக்குப் பின்னடைவு ஏற்படுவதற்குப் பல காரணங்கள் உள்ளன. ஐக்கிய தேசியக் கட்சியுடன் கூட்டு வைத்தமை அதில் பிரதான ஒரு காரணமாகும்.
எனினும், அப்போதைய அரசியல் சூழ்நிலையில் நாட்டின் நலன்கருதி எடுக்கப்படவேண்டிய சிறந்த முடிவாகவும் அந்தத் தீர்மானமே இருந்தது.
கட்சி, கொள்கை என்பதைவிட நாட்டில் அரசியல் ஸ்திரத்தன்மையை ஏற்படுத்துவதற்காகவே ரணில் விக்கிரமசிங்கவுக்கு ஆதரவளித்தோம். எமது கட்சியில் இருந்த சிரேஷ்ட உறுப்பினர்களும் சென்றனர். பொருத்தமற்ற திருமண பந்தத்தில் இணைந்தால், உறவுகளையும் இழக்கநேரிடும், குடும்பமும் இல்லாமல்போகும். அப்படிதான் எமக்கும் நடந்தது - என்றார். (ச-44)

## தேர்தல் செலவைக் கணிக்க தனிநபரை நியமியுங்கள்

கொழும்பு, ஒக்.19
பொதுத்தேர்தலில் போட்டியிடும் வேட்பாளர்கள் தமது செலவு மற்றும் வருமானப் பதிவேடுகளைப் பேணுவதற்கு தனி நபரை நியமிப்பது பொருத்தமானது என பவ்ரல் அமைப்பு சுட்டிக்காட்டியுள்ளது.
கடந்த ஜனாதிபதித் தேர்தலில் வருமான செலவு அறிக்கைகளை வழங்குவதில் சில வேட்பாளர்களுக்கு ஏற்பட்ட சிரமங்களை பொதுத்தேர்தல் வேட்பாளர்களும் சந்திக்க நேரிடலாம். ஒரு வேட்பாளர் தனது செலவு அறிக்கையை வழங்கமுடியாவிட்டால், அவர் நீதித்துறை செயல்முறை மூலம் 3 ஆண்டுகளுக்கு தனது அரசியல் உரிமைகளை இழக்கநேரிடும் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ச)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாராளுமன்ற தேர்தல் 2024
- யாழ்ப்பாணம், கிளிநொச்சி தேர்தல் மாவட்டம் -
மானுக்கு வாக்களிப்போம்
இனத்துக்கு வாழ்வளிப்போம்
சட்டத்தரணி
விஸ்வலிங்கம் மணிவண்ணன்
முதன்மை வேட்பாளர், தமிழ் மக்கள் கூட்டணி
முன்னாள் முதல்வர், யாழ்.மாநகர சபை.
1 உமாகரன் இராசையா - சட்டத்தரணி -
2 கதிரேசன் சஜீதரன் - பிராந்திய முகாமையாளர் -
3 தவச்செல்வம் சிற்பரன் - கட்டடக் கலைஞர் -
4 நா.கோகுலவாணி - தொழில் முயற்சியாளர் -
5 பிரான்சிஸ் செல்ரன் - கிரிக்கட் பயிற்றுனர் -
6 ஸ்ரீ.மிதிலைச்செல்வி - நிறைவேற்று அதிகாரி SLIC-
7 முருகானந்தன் யசிந்தன் - ஆசிரியர் -
8 வரதராஜன் பார்த்திபன் - முன்னாள் மாநகர சபை உறுப்பினர் -
9 விஸ்வலிங்கம் மணிவண்ணன் - முன்னாள் முதல்வர் -
தமிழ் மக்கள் கூட்டணி X

யாழ்ப்பாணம் மற்றும் கிளிநொச்சி தேர்தல் மாவட்டம்
பாராளுமன்ற தேர்தல் 2024
நேர்மையான வினைத்திறன்மிக்க அரசியலுக்கு! இளைஞர்களின் வருகையை ஆதரிப்போம்!
எமது அரசியல் நிலைப்பாடு
ஐந்து அம்சங்களை உள்ளடக்கிய அரசியல் பயணம்!
1. அரசியல் தலைமைத்துவக் கட்டமைப்பும், அரசியல் தீர்வும்
2. முயற்சியாண்மை
3. கல்வி
4. விளையாட்டு
5. கலை, கலாச்சாரம்
இது தொடர்பான எமது தேர்தல் விஞ்ஞாபனம்
-காரைநகர்
-யாழ்ப்பாணம்,
-வடமராட்சி
-தென்மராட்சி
-கிளிநொச்சி
ஆகிய பகுதிகளில் நடைபெறவுள்ள பிரச்சாரக் கூட்டங்களில் சமர்ப்பிக்கப்படும்!
(திகதி, நேரம், இடம் பற்றிய விபரங்கள் எதிர் வரும் வாரம் அறிவிக்கப்படும்)
வீழ்ந்தால் நான் மட்டும் வீழ்கிறேன்!
எழுந்தால் பலமான தமிழர் பரப்பு புது விடியலை நோக்கி பயணிக்கட்டும்.
மாற்றத்திற்கான நம்பிக்கை...
E.S.P நாகரத்தினம் கமலருபன் - சட்டத்தரணி, இளம் தொழில் முயற்சியாளர்
LL.B (Hons), BA (Economics) (University of Colombo)
ஊஞ்சல் சின்னம்
4
சுயேச்சைக் குழு - 2
களத்தில் கமல்
2024 எமக்கான நேரம்
1 2 3 4 5 6 7 8 9

# பிறப்பு வீதம் சரிவு இறப்புகள் உயர்வு

## ஆய்வில் தகவல்

கொழும்பு , ஒக்.19

**2019 மற்றும் 2023க்கு இடைப்பட்ட ஐந்து வருட காலப்பகுதியில் இலங்கையில் பதிவு செய்யப்பட்ட பிறப்புகளின் எண்ணிக்கை 71,110 ஆகக் குறைந்துள்ளதுடன், பதிவு செய்யப்பட்ட இறப்புகளின் எண்ணிக்கை 34,842 ஆக அதிகரித்துள்ள தாக பதிவாளர் நாயகம் திணைக்களத்தின் தரவுகள் தெரிவிக்கின்றன.**

இலங்கையில் 2019ஆம் ஆண்டு 3,19,010 குழந்தைகளும், 2020 ஆம் ஆண்டில் 3,01,706 குழந்தைகளும் பிறந்துள்ளன.

குறித்த தகவலின்படி, 2021ஆம் ஆண்டில் 2,84,848 பிறப்புகள் பதிவாகியுள்ளன, இது முந்தைய ஆண்டை விட 16,858 பிறப்புகள் குறைந்துள்ளன. 2022ஆம் ஆண்டில், முந்தைய ஆண்டை விட 2,75,321 பிறப்புகள் பதிவாகியுள்ளன, இது முந்தைய ஆண்டை விட 9,527 பிறப்புகள் குறைந்துள்ளன. 2023ஆம் ஆண்டில், இலங்கையில் 2,47,900 பிறப்புகள் பதிவு செய்யப்பட்டுள்ளன, இது முந்தைய ஆண்டுடன் ஒப்பிடுகையில் 27,421 பிறப்புகள் குறைந்துள்ளன.

2019 முதல் 2023 வரையிலான ஐந்து ஆண்டுகளில், இலங்கையில் பதிவு செய்யப்பட்ட பிறப்புகளின் எண்ணிக்கை 71,110 ஆகக் குறைந்துள்ளது.

அதேவேளை 2019 இல் பதிவு செய்யப்பட்ட இறப்புகளின் எண்ணிக்கை 1,46,397 ஆகவும், 2020 இல் இது 1,32,431 ஆகவும் 2021ஆம் ஆண்டில் 1,63,936 ஆகவும் பதிவாகியுள்ளது. 2021 மற்றும் 2022 இல் இறப்பு எண்ணிக்கையில் அசாதாரண அதிகரிப்பு, அந்தக் காலகட்டத்தில் கொரோனாத் தொற்று இருக்கலாம். என்றும் புள்ளிவிவரங்கள் தெரிவிக்கின்றன. (ச-இ)

# தே.ம. ச. அலுவலகம் யாழில் திறந்துவைப்பு

யாழ்ப்பாணம், ஒக்.19

தேசிய மக்கள் சக்தியின் தென்மராட்சிக்கான அலுவலகம் ஏ-9 வீதி, சாவகச்சேரி பகுதியில் கடந்த புதன்கிழமை திறந்து வைக்கப்பட்டது.

இந்த நிகழ்வில் நாடாளுமன்ற முன்னாள் உறுப்பினரும், தேசிய மக்கள் சக்தியின் யாழ். மாவட்ட அமைப்பாளருமான இராமலிங்கம் சந்திரசேகரம் பிரதம விருந்தினராகக் கலந்துகொண்டார்.

நிகழ்வில் முதன்மை வேட்பாளர் கருணாநாதன் இளங்குமரன், முன்னாள் மருத்துவ நிர்வாக அதிகாரி எஸ்.சிறீபவனந்தராஜா, அதிபர் ஜெயச்சந்திர மூர்த்தி ரஜீவன், தேசிய மக்கள் சக்தியின் தென்மராட்சி மகளிர் அணி அமைப்பாளர் வெண்ணிலா இராசலிங்கம், ஆசிரியர் காராளசிங்கம் பிரகாஸ், மென்பொருள் பொறியியலாளர் உதயகுமார் கீர்த்தி ஆகிய வேட்பாளர்கள் மற்றும் பிரதேச மக்கள் ஆகியோர் கலந்துகொண்டனர். (ச-45-27)



# இருபாலையில் வாணி விழா

யாழ்ப்பாணம், ஒக். 19

இருபாலை வன்னியசிங்கம் சனசமூக நிலையம் நடாத்தும் வாணி விழா இன்று சனிக்கிழமை இரவு 7 மணியளவில் சனசமூக நிலைய மைதானத்தில் இடம்பெறவுள்ளது.

இதன்போது கலைநிகழ்வுகள், மாணவர்களுக்கான கௌரவிப்பும் பரிசில் வழங்கலும் மற்றும் பார்வையாளர்களுக்கான சுவாரஸ்யமான போட்டிகளும் இடம்பெறவுள்ளன. (ட-65)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




## கேரதீவு – சங்குப்பிட்டிப் பாலத்தில்

# கனரகவாகனங்களுக்கு 3 நாள்களுக்குத் தடை!

யாழ்ப்பாணம், ஒக்.19
கேரதீவு - சங்குப்பிட்டிப் பாலத்தில் ஏற்பட்டுள்ள சேதம் காரணமாக உடனடியாக அவசர திருத்த வேலைகள் நடைபெறவுள்ளன. அதனால் நேற்று முதல் எதிர்வரும் 3 நாள்களுக்கு இந்தப் பாலத்தினூடாக கனரக வாகனங்களின் போக்குவரத்துக்குத் தடைவிதிக்கப்பட்டுள்ளது என்று வீதி அபிவிருத்தி அதிகாரசபையினர் அறிவித்துள்ளார்கள்.
அதேவேளை இலங்கைப் போக்குவரத்துச்சபை மற்றும் தனியார் சிற்றூர்திச் சேவையில் பயணிக்கும் பயணிகள் மாத்திரம் பயணித்து சில இடங்களில் இறங்கி நடந்து செல்லவேண்டிய தேவைப்பாடு உள்ளது.
மேலும் மருத்துவமனைக்குச் செல்லவேண்டி நோயாளர்களுக்கு விசேட ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன எனப் பதில் மாவட்டச் செயலாளர் ம.பிரதீபன் அறிவித்துள்ளார்.
கனகர வாகனங்கள் மாற்றுப் பாதையைப் பயன்படுத்துமாறும், பாதைக்கான திருத்த வேலைகள் விரைவாகப் பூர்த்தி செய்யப்படும் பட்சத்தில் பயன்பாட்டுக்கு அனுமதிக்கப்படும் என்றும் அவர் மேலும் குறிப்பிட்டார். (ச-26,27,60,20,113)

## மணலகழ்வில் 14 டிப்பர்கள்; பளை பொலிஸார் முறியடிப்பு



கிளிநொச்சி, ஒக்.19
கிளாலிப் பகுதியில் சட்ட விரோதமாக மணலகழ்வில் ஈடுபட்ட 14 டிப்பர்கள் பொலிஸாரின் அதிரடி நடவடிக்கையால் நேற்று கைது செய்யப்பட்டுள்ளன.
கிளிநொச்சி மாவட்ட சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் உபுல் செனவிரட்ணவுக்குக் கிடைத்த இரகசியத் தகவலையடுத்து கிளிநொச்சி கிளாலிப் பகுதியில் பளை பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி ஜீ.குலரட்ண தலைமையில் சோதனை நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டது.
இதன்போது பளைப் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட கிளாலிப் பகுதியில் குறித்த மணலுடன் தரித்து நின்ற 14 டிப்பர்களை பொலிஸார் கைப்பற்றினர்.
சந்தேகநபர்கள் எவரும் கைது செய்யப்படவில்லை என்றும் குறித்த சம்பவம் தொடர்பாக மேலதிக விசாரணைகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன என்றும் பளைப் பொலிஸார் தெரிவித்தனர். (ச-113)

## நிர்ணயவிலை முட்டைக்கு வேண்டும்

கொழும்பு, ஒக்.19
முட்டை விலையை நிர்ணயம் செய்வதற்கு விலைச் சூத்திரம் ஒன்றை கொண்டு வரவேண்டும் என முட்டை வர்த்தக சங்கங்கள் அரசாங்கத்துக்கு கோரிக்கை விடுத்துள்ளது.
அகில இலங்கை முட்டை வர்த்தக சங்கத்தின் செயலாளர் அனுரமாரசிங்க இதுதொடர்பில் தெரிவிக்கையில்,
முட்டை ஒன்றை உற்பத்தி செய்வதற்கு 25 ரூபாவுக்கும் குறைவாகவே செலவாகுகின்றது. சந்தையில் ஒரு முட்டையை 35 ரூபாவுக்கு விற்பனை செய்யமுடியும்.
சந்தையில் ஒரு முட்டையின் விலை 40 ரூபா முதல் 45 ரூபா வரை அதிகரித்துள்ளது.
இதனால், முட்டை விலையை நிர்ணயம் செய்வதற்கு விலைச் சூத்திரம் ஒன்றைக் கொண்டு வர வேண்டும் என்றும் அவர் குறிப்பிட்டார். (ச-இ)



மானிப்பாய் பொலிஸ் நிலையத்தின் ஏற்பாட்டில் இரத்ததான முகாம் கட்டுடை ஜே/140 கிராம அலுவலர் பொதுநோக்கு மண்டபத்தில் நேற்றுமுன்தினம் வியாழக்கிழமை நடைபெற்றது. (ச-25)

## வாசிப்பு மாத நிகழ்வு

யாழ்ப்பாணம், ஒக்,19
தேசிய வாசிப்பு மாதத்தை முன்னிட்டு அமெரிக்கன் கோணர் அமைப்பால், ஆங்கில அறிவை விருத்திசெய்யும் நோக்கில் யாழ். பொதுசன நூலகத்தின் சிறுவர் பகுதியில் நாளை ஞாயிற்றுக்கிழமை மு.ப.10.30 மணிக்கு விசேட செயற்பாடுகள் நடைபெறவுள்ளன. (ச-45)

## இன்றைய (ராசிபலன்)

**மேடம்:** சுறுசுறுப்பாகவும் பரபரப்பாகவும் காணப்படுவீர்கள். குடும்பத்தில் மகிழ்ச்சி உண்டாகும். புதிய முயற்சி சாதகமாக முடியும். வீண்செலவுகள் ஏற்படும். முருகப்பெருமானை வழிபடுவது நன்று. அதிருப்திக்கு ஆளாக நேரிடும்.

**இடபம்:** மனதில் தேவையற்ற சின்னச் சின்னக் குழப்பங்கள் தோன்றி மறையும். புதிய முயற்சிகளில் ஈடுபடவேண்டாம். முக்கியமான முடிவு எடுப்பதைத் தவிர்க்கவும். தெய்வப்பணிகளில் பங்கேற்கும் வாய்ப்பு ஏற்படும். திடீர் செலவுகளும் ஏற்படும்.

**மிதுனம்:** உற்சாகமாக இருப்பீர்கள். மனதில் சாதிக்கவேண்டும் என்ற எண்ணம் அதிகரிக்கும். புதிய முயற்சிகளில் செயற்படுவது நல்லது. உடல் ஆரோக்கியத்தில் கவனம் தேவை. அலைச்சலும் செலவுகளும் ஏற்படும்.

**கடகம்:** புதிய முயற்சிகளில் வெற்றி கிடைக்கும். எதிரிகளால் ஏற்பட்ட தொல்லைகள் விலகும். சகோதரர்களால் ஆதாயம் உண்டாகும். குடும்பத்தில் மகிழ்ச்சி நிலவும். முக்கிய முடிவு எடுப்பதற்கு உகந்த நாள். சுபநிகழ்ச்சிகளுக்கான பேச்சு வார்த்தை

**சிம்மம்:** செயல்கள் அனைத்தையும் சிந்தித்து செயற்படவேண்டிய நாள். மனஸ்தாபம் ஏற்பட வாய்ப்பு உள்ளது. அனுசரித்துச் செல்வது நல்லது. வீண்செலவுகளால் கையிருப்பு கரையும். சிலருக்குக் கடன் வாங்கவும் நேரிடும்.

**கன்னி:** பலவகைகளிலும் அனுகூலமான நாள். புதிய முயற்சிகள் சாதகமாகும். உறவினர்கள் மூலம் மகிழ்ச்சி தரும் செய்தி கிடைக்கும். உடல் ஆரோக்கியத்தில் கவனம் தேவை. விற்பனையும் லாபமும் குறைவாகவே இருக்கும்.

**துலாம்:** செலவுகள் அதிகரிக்கும் நாள். உறவினர்களால் ஆதாயம் உண்டாகும். முக்கியமான முடிவு எடுப்பதில் அவசரம் வேண்டாம். கொடுத்த கடன் திரும்பக் கிடைக்க வாய்ப்பு உள்ளது. நண்பர்கள் பணம் கேட்டு வருவார்கள்.

**விருச்சிகம் :** எடுத்த காரியம் அனுகூலமாக முடியும். உறவினர்கள் வகையில் எதிர்பார்த்த உதவி கிடைக்கும். உடல் ஆரோக்கியம் மேம்படும். புதிய முயற்சி சாதகமாக முடியும். பணவரவுடன் திடீர் செலவுகளும் ஏற்படக்கூடும்.

**தனுசு:** சாதிக்கும் நாளாக அமையும். தன்னம்பிக்கையுடன் செயற்படுவீர்கள். குடும்பத்தில் மகிழ்ச்சி நிலவும். சிலருக்கு எதிர்பாராத பணவரவுக்கும் வாய்ப்பு உண்டு. விற்பனையும் லாபமும் கூடுதலாகக் கிடைக்கும்.

**மகரம்:** புதிய முயற்சிகளைத் தவிர்க்கவும். தந்தையின் உடல் ஆரோக்கியம் மேம்படும். செலவுகள் ஏற்பட்டாலும் அதனால் மகிழ்ச்சியே உண்டாகும். காரியங்கள் இழுபறியாகும். செலவுகளை சமாளிக்க நேரிடும்.

**கும்பம்:** பணவரவு அதிகரிக்கும். பொறுமையைக் கடைப்பிடிப்பது நல்லது. மற்றவர்களால் மறைமுகத் தொல்லைகளும், விமர்சனங்களும் ஏற்படக்கூடும். குடும்பத்தில் சிறு சங்கடம் ஏற்படும். பாதிப்பு எதுவும் இருக்காது.

**மீனம்:** அனுகூலமான நாள் .தந்தைவழி உறவினர்கள் மூலம் எதிர்பார்த்த காரியம் அனுகூலமாக முடியும். வீண் செலவுகள் ஏற்படக்கூடும். எதிர்பார்த்த லாபம் கிடைக்கும். சிவபெருமானை வழிபடுவது நன்று.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உண்மை - நேர்மை - அஞ்சாமை

உதயன்


மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

## எது அனுபவம்?

நாட்டின் பொருளாதார நெருக்கடிக்குத் தீர்வு காண்பதற்கு தன்னுடன் இணைந்து செயற்பட்ட அனுபவசாலிகளை நாடாளுமன்றம் அனுப்ப வேண்டும் என்று வலியுறுத்தியிருக்கின்றார் முன்னாள் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க. அவர்கள் இல்லாவிடில் நாடு தோல்வியடையும் என்றும் அவர் மக்களை எச்சரித்திருக்கின்றார். பெரும் பொருளாதார நெருக்கடியில் இருந்து இலங்கை போன்றதொரு நலிந்த பொருளாதார நாட்டை மீட்டு வருவதற்கு அனுபவம் அவசியம்தான். அதை மறுப்பதற்கில்லை. ஆதலால், முன்னனுபவம் என்பது இந்த விடயத்தில் காலத்தேவையானது என்ற ஜனாதிபதி ரணிலின் கூற்றை ஏற்கத்தான் வேண்டும். அதில் மறுகருத்துக்கு இடமில்லை. ஆனால், தன்னுடன் பயணித்தவர்களை நாடாளுமன்றத்துக்கு அனுப்ப வேண்டும் என்ற ஒரே கொள்கையில் நிலைப்பாட்டில் நின்றுகொண்டு இந்தக் கருத்தை அவர் தெரிவிப்பதென்பது ஏற்க முடியாதது அபத்தமானது.

எல்லாவற்றையும் விட, ரணிலுடன் கடந்த இரண்டு ஆண்டுகளாக இணைந்து பயணித்தவர்கள் எவரும் பொருளாதார வல்லுநர்களோ அல்லது பொருளாதாரத்துக்காக நோபலை வென்றவர்களோ அல்ல. மாறாக இந்தப் பேரழிவின் ஆதியும் அவர்கள்தான் மூலமும் அவர்கள்தான். இறந்தும் இறவாமலுமாகக் குற்றுயிராகக் கிடந்த இலங்கைக்கு ஆபத்பாந்தவனாக இந்தியா வழங்கிய தாராள உதவிகள்தான், இந்த நாட்டை பொருளாதாரப் பேரிடரில் இருந்து மீட்டன. மீட்சிக்கான பயணத்தின் இரண்டாம் படிநிலையாக சர்வதேச நாணயநிதியம் கரம் கொடுத்தது. ஆக, இதில் ரணிலுக்கோ அல்லது ரணிலின் தரப்புக்கோ எந்தப் பங்கும் இல்லை. நாணயநிதியத்தின் தாராள உதவிகளொன்றும் இலவச இணைப்புகள் அல்ல. ஒவ்வொன்றும் பெரும் சுமைகள். தற்போது கிடைத்திருப்பது தற்காலிகத் தீர்வு. அவ்வளவே. வழங்கப்பட்ட ஒவ்வொரு டொலருக்கும் முதலும் வட்டியுமாகச் சேர்த்து அதைத் திரும்பச் செலுத்தப்போவது ஒவ்வொரு இலங்கையரும்தான். இப்படிப் பார்க்கையில், ரணில் குழுவினர் இலங்கையர்களின் மீட்பர்கள் அல்லர். மாறாக எம்மைச் சிலுவையில் ஏற்றியவர்களே அவர்கள்தான். இவ்வாறிருக்கையில், தன் குழுவினரை பொருளாதாரப் பேரரசர்கள் என்ற தோரணையில் ரணில் கருத்துத் தெரிவிப்பதானது பெரும் அபத்தம்.

ரணிலுடன், கடந்த இரண்டு ஆண்டுகளாக இருந்தவர்கள்தான் ஜனாதிபதி கோத்தாபயவுடனும் இருந்தார்கள். ஜனாதிபதி கோத்தாபயவின் தவறான தீர்மானங்கள்தான் நாட்டைச் சடுதியாகப் பின் தள்ளின. எனில், நாட்டை வறிதாக்கியதும் அதே குழுவினர்தானே? இதற்கான பதிலென்று ரணிலிடம் என்ன இருந்துவிடப் போகின்றது? உள்நாட்டு உற்பத்தியை அதிகரிக்காமல் - நாட்டுக்குள் பணச் சுழற்சியை மிகைப்படுத்தாது-இறக்குமதித் தடைகளுக்கு அப்பாற்பட்ட டொலர் இருப்பை உறுதிப்படுத்தாமல் இருந்துவிட்டு, கடன்களையும் பிணைகளையும் வாங்கிக் குவித்தது மட்டுமல்லாமல், அதைப் பொருளாதார மீட்சி என்று சுய தம்பட்டம் அடிப்பதற்கும் ஓர் அசாத்தியத் துணிவு வேண்டும். அந்தத் துணிவு ரணிலிடம் மிகையாகவே இருக்கின்றது. ஏனெனில் ரணில் ஜே.ஆரின் மருமகன்.




பரீட்சை மோசடிகளில் ஈடுபட்ட

# 439 ஆசிரியர்கள் மீது பாய்ந்தது நடவடிக்கை

**கொழும்பு, ஒக். 19**

**2015ஆம் ஆண்டு முதல் இன்று வரை பரீட்சை மோசடிகள் தொடர்பாக 439 ஆசிரியர்கள் மீது நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.**

இவர்களுக்கு பரீட்சை தொடர்பான விடயங்களில் கடமையாற்றுவதற்கு ஆயுள் காலத் தடை விதிக்கப்பட்டுள்ளது என இலங்கை ஆசிரியர் சங்கத் தலைவர் பிரியந்த பெர்னாண்டோ தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

பரீட்சைத் திணைக்களக் கட்டமைப்பில் மாற்றம் செய்யப்படவேண்டும். பரீட்சை ஆணையாளர் மாற்றப்படவேண்டும். அண்மையில் நடைபெற்ற தரம் ஐந்து புலமைப்பரிசில் பரீட்சை வினாத்தாள் முன்கூட்டியே வெளியானமை தொடர்பில் மூன்று பேர் மீது நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. ஆனால் இதில் மேலும் பலர் சம்பந்தப்பட்டுள்ளனர் - என்றார். (ஒ-6)

## ஒலிபரப்புக் கூட்டுத்தாபனத்தை மறுசீரமைக்க நடவடிக்கை

கொழும்பு, ஒக். 19

நட்டத்தில் இயங்கும் இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனத்தை புனரமைக்கும் நோக்குடன் சில நடவடிக்கைகளை அரசாங்கம் எடுத்துள்ளது. ஒலிபரப்புக் கூட்டுத்தாபனத்துக்குச் சொந்தமான காணியை விற்பனை செய்வதற்கு அரசாங்கம் தீமானித்துள்ளது. எக்கலவிலுள்ள காணி 1.5 பில்லியன் ரூபாவுக்கு விற்பனை செய்யப்படவுள்ளதுடன் ஒலிபரப்புக் கூட்டுத்தாபனம் 320 மில்லியன் ரூபா செலவில் நவீனமயப்படுத்தப்படவுள்ளது. ஒலிபரப்புக் கூட்டுத்தா பன ஊழியர்களுக்கும் சுய விருப்பின் அடிப்படையில் இளைப்பாறுவதற்கு சந்தர்ப்பம் வழங்கப்பட்டுள்ளது. (ஒ-6)





## பருப்பு, கருவாடு வரிகள் உயர்வு

பருப்பு, கருவாடு என்பவற்றின் வரிகள் அதிகரிக்கப்பட்டுள்ளன. மைசூர் பருப்பு, மஞ்சள் பருப்பு என்பவற்றுக்கு ஒரு கிலோவுக்கு 25 சதம் அதிகாரிக்கப்பட்டுள்ளது. மாசிக் கருவாட்டுக்கு ஒரு கிலோவுக்கு 302 ரூபா வரி விதிக்கப்படவுள்ளது. தகரத்திலடைக்கப்பட்ட மீனுக்கு ஒரு கிலோவுக்கு 400 ரூபா அல்லது பத்து வீதம் இதில் எது அதிகமோ அந்தத் தொகை வரியாக அறவிடப்படும். இந்த நடைமுறை இம்மாதம் 14 ஆம் திகதி முதல் டிசெம்பர் 31 ஆம் திகதி வரை நடைமுறையில் இருக்குமென அறிவிக்கப்பட்டுள்ளது. (ச-6)

## இலஞ்ச ஊழல்கள் 3,045 முறைப்பாடுகள்

கொழும்பு, ஒக்.19

பொதுமக்களிடமிருந்து, இலஞ்சம் மற்றும் ஊழல் விசாரணை ஆணைக்குழுவுக்கு இந்த வருடத்தின் செப்ரெம்பர் மாதம் வரையான காலப்பகுதியில் 3,045 முறைப்பாடுகள் கிடைத்துள்ளன. இவற்றுள் 811 முறைப்பாடுகளை விசாரணை செய்யுமாறு இலஞ்சம் மற்றும் ஊழல் விசாரணை ஆணைக்குழு உத்தரவிட்டுள்ளது. (ச)

## 26 கப்பல்களால் கடல் மாசு

கடந்த வருடத்தில் 26 கப்பல்கள் இலங்கைக் கடற்பரப்பில் மாசு ஏற்படுத்தியதாக கடல்சார் சுற்றுச்சூழல் பாதுகாப்பு ஆணையகம் தெரிவித்துள்ளது. பிரான்ஸ் அரசாங்கத்துடன் இணைந்து நடத்தப்பட்ட செயற்கைக் கோள் கண்காணிப்புத் திட்டத்தின் தரவுகளின் அடிப்படையில் இந்தத் தகவல் வெளியிடப்பட்டுள்ளது. (ச)

## நாளை

20.10.2024

ஞாயிற்றுக்கிழமை - ஐப்பசி - 03

சுபநேரம் : 09.02 - 10.32

ராகுகாலம் : 04.32 - 06.02

## நாளொரு நல்வார்த்தை

நல்லுணர்வு என்பது பகல் பொழுதைப் போன்றது. அதுதான் ஒளியை எல்லாவற்றின் மீதும் பரப்புகிறது.

- எமெர்சன்-

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கரைதுறைப்பற்று பிரதேசசபை, முல்லைத்தீவு

# 2025 ஆம் ஆண்டிற்கான கேள்வி அறிவித்தல்

கரைதுறைப்பற்று பிரதேச சபையின் அதிகார எல்லைக்குள் காணப்படும் சந்தைகள், இறைச்சிக் கடைகள், சிறுவர் பூங்கா சிற்றுண்டிச்சாலை, கருவாட்டுக்கடைகள் மற்றும் தண்ணீரூற்று சந்தை வாகனத்தரிப்பிடம் என்பவற்றினை 2025 ம் ஆண்டு ஜனவரி மாதம் 1ம் திகதி முதல் டிசம்பர் மாதம் 31ம் திகதி வரையிலான காலப்பகுதிக்கு குத்தகைக்கு வழங்குவதற்கான கேள்விகள் கோரப்படுகின்றன.

கேள்விப்பத்திரம் வழங்கப்படும் திகதி :- 21.10.2024 தொடக்கம் 01.11.2024, 2.30 மணி வரை (கடமை நாட்களில்)
கேள்விகள் ஏற்றுக்கொள்ளப்படும் திகதி :- 04.11.2024 முற்பகல் 10 மணி வரை
கேள்விகள் திறந்து பரிசீலிக்கப்படும் திகதி :- 04.11.2024 முற்பகல் 10.30.

1. கேள்விப்பத்திரத்தினை இரு பிரதிகளில் தயாரித்து மூலப்பிரதியை **செயலாளர், கரைதுறைப்பற்று பிரதேசசபை, முல்லைத்தீவு.** என்னும் முகவரிக்கு முத்திரை இட்டு தபாலுறையின் இடது பக்க மேல் மூலையில் கேள்வியின் பெயர் தெளிவாக எழுதப்பட்டு பதிவுத்தபால் மூலம் 04.11.2024 முற்பகல் 10 மணிக்கு முன் கிடைக்கக் கூடியவாறு அனுப்புதல் வேண்டும். அல்லது இதற்கென கரைதுறைப்பற்று பிரதேசசபை தலைமை அலுவலகத்தில் வைக்கப்பட்டுள்ள கேள்விப் பெட்டியில் உரிய நேரத்திற்கு முன் இடப்பட வேண்டும். மறு பிரதியை **பிராந்திய உள்ளூராட்சி உதவி ஆணையாளர், பிராந்திய உள்ளூராட்சி உதவி ஆணையாளர் அலுவலகம், முல்லைத்தீவு** என்ற முகவரிக்கு 04.11.2024 முற்பகல் 10 மணிக்கு முன்னர் கிடைக்கக்கூடியதாக நேரடியாகவோ அல்லது பதிவுத்தபால் மூலமோ அனுப்பி வைத்தல் வேண்டும்.
2. கேள்விப்பத்திரங்களை பெற விரும்புபவர்கள் கிராமசேவையாளரினால் வழங்கப்பட்ட பிரதேச செயலாளரால் மேலொப்பமிட்ட வதிவிடச்சான்றிதழ் மற்றும் தேசிய அடையாள அட்டைப் பிரதியுடன் நேரடியாக சம்பந்தப்பட்டவர் கரைதுறைப்பற்று பிரதேசசபையின் தலைமை அலுவலகத்திற்கு சமுகமளிக்க வேண்டும். கரைதுறைப்பற்று பிரதேசசபை எல்லைக்குள் நிரந்தரமாக வசிப்பவர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும்.
3. உள்ளூராட்சி மன்றங்களினால் தவறுனராக கணிக்கப்பட்ட எவருக்கும் கேள்விப்பத்திரங்கள் வழங்கப்பட மாட்டாது. எனினும் தவறுதலாக வழங்கப்பட்டிருப்பின் அது நிராகரிக்கப்படுவதுடன் இது தொடர்பான வைப்புக்கள் எதுவும் மீளளிக்கப்பட மாட்டாது.
4. கேள்வி நிபந்தனைகள், அறிவுறுத்தல்களிற்கு அமையாத கேள்விக் கோரிக்கைகளை நிராகரிக்கவும் எந்தவொரு கேள்வி தொடர்பிலும் இறுதி முடிவெடுக்கவும் கேள்விச்சபைக்கே பூரண அதிகாரமுண்டு.
5. எம்மால் நிர்ணயிக்கப்படும் இடத்தில் மாடுகள், ஆடுகள் கட்டப்பட்டு அனுமதிக்கப்பட்ட கொல் களத்திலேயே இறைச்சிக்குரிய மாடுகள், ஆடுகள் அறுக்கப்பட வேண்டும்.
6. எமது சபையின் சந்தைகள், இறைச்சிக்கடைகளிலிருந்து 1.5KM தூரத்திற்குட்பட்ட கடைகளில் அல்லது வேறு எவ்விடத்திலும் மரக்கறிகள், இறைச்சி விற்பனை தடைசெய்யப்பட்டுள்ளது.
7. ஒவ்வொரு கேள்விப்பத்திர வகைகளுக்கும் அதிகூடிய கேள்வித்தொகை கூறும் கேள்விதாரருக்கு சபையுடனான ஒப்பந்தம் கைச்சாத்திடப்பட வேண்டும். தவறும் பட்சத்தில் மீள் கேள்வி அறிவித்தல் செய்யப்படும்.
8. தெரிவு செய்யப்பட்ட கேள்விதாரர் அறிவித்தல் செய்யப்பட்ட திகதியிலிருந்து 03 நாட்களுக்குள் அல்லது சபையால் வழங்கப்பட்ட கால எல்லைக்குள் குறிப்பிட்ட கேள்வித் தொகையின் 1/3 பகுதியை (உரிய வரிகளுடன்) பாதுகாப்பு வைப்பாக செலுத்தி குத்தகை ஒப்பந்த உடன்படிக்கை பூர்த்தி செய்தல் வேண்டும்.
9. சந்தைகள், இறைச்சிக் கடைகள், சிறுவர் பூங்கா சிற்றுண்டிச்சாலை, கருவாட்டுக்கடைகள் மற்றும் தண்ணீரூற்று சந்தை வாகனத்தரிப்பிடம் என்பவற்றிற்கு விண்ணப்பம் பெறுபவர்கள் முன்பு சபையின் கடை நடாத்தியவராயின் எதுவித நிலுவையும் இல்லை என்பதனை உப அலுவலக பொறுப்பதிகாரியால் உறுதிப்படுத்திய கடிதம் சமர்ப்பித்தல் வேண்டும்.
10. மாத வாடகை யாவும் விலை மதிப்பீட்டு திணைக்களத்தின் மதிப்பீட்டின் பிரகாரம் மாற்றத்தை ஏற்படுத்தும்.
11. கேள்வி சம்பந்தமாக மேலதிக விபரங்களை பிரதேசசபையின் தலைமை அலுவலகத்தில் அலுவலக நேரத்தில் பெற்றுக்கொள்ளலாம்.

| இல | பெயர் | கேள்விப்படிவக் கட்டணம் (VAT,NB) நீங்கலாக | மீளளிக்கப்படும் கேள்வி வைப்புப்பணம் ரூபா | கடைக்குரிய மாதாந்த வாடகைத் தொகை ரூபா | ஏற்றுக்கொள்ளக் கூடிய ஆகக் குறைந்த கேள்வித் தொகை (VAT,NB) நீங்கலாக |
|---|---|---|---|---|---|
| முல்லைத்தீவு உப அலுவலகம் | | | | | |
| 1 | முல்லைத்தீவு பொதுச்சந்தை | 2,000.00 | 40,000.00 | - | 1,334,850.00 |
| 2 | முல்லைத்தீவு மாட்டிறைச்சிக்கடை | 2,000.00 | 70,000.00 | 5,000.00 | 2,310,000.00 |
| 3 | முல்லைத்தீவு கோழி இறைச்சிக்கடை | 2,000.00 | 48,000.00 | 5,000.00 | 1,596,105.50 |
| 4 | முல்லைத்தீவு ஆட்டு இறைச்சிக்கடை | 2,000.00 | 3,000.00 | 5,000.00 | 100,000.00 |
| 5 | முல்லைத்தீவு கருவாட்டுக்கடை | 2,000.00 | 3,000.00 | 5,000.00 | 99,110.00 |
| 6 | முல்லைத்தீவு சிறுவர் பூங்கா சிற்றுண்டிச்சாலை | 2,000.00 | 18,000.00 | 4,500.00 | 580,800.00 |
| 7 | சிலாவத்தை பொதுச்சந்தை | 2,000.00 | 1,500.00 | - | 49,830.00 |
| 8 | சிலாவத்தை மாட்டிறைச்சிக்கடை | 2,000.00 | 37,000.00 | - | 1,212,200.00 |
| 9 | சிலாவத்தை கோழி இறைச்சிக்கடை | 2,000.00 | 14,000.00 | - | 452,100.00 |
| முள்ளியவளை உப அலுவலகம் | | | | | |
| 10 | முள்ளியவளை பொதுச்சந்தை | 2,000.00 | 54,000.00 | - | 1,798,500.00 |
| 11 | தண்ணீரூற்று பொதுச்சந்தை | 2,000.00 | 112,500.00 | - | 3,741,100.00 |
| 12 | வற்றாப்பளை பொதுச்சந்தை | 2,000.00 | 1,500.00 | - | 46,200.00 |
| 13 | கேப்பாப்பிலவு பொதுச்சந்தை | 2,000.00 | 200.00 | - | 5,500.00 |
| 14 | முள்ளியவளை மாட்டிறைச்சிக்கடை | 2,000.00 | 40,000.00 | 3,150.00 | 1,320,000.00 |
| 15 | முள்ளியவளை கோழி இறைச்சிக்கடை | 2,000.00 | 24,000.00 | 3,150.00 | 790,900.00 |
| 16 | தண்ணீரூற்று மாட்டிறைச்சிக்கடை | 2,000.00 | 90,000.00 | 2,700.00 | 2,982,210.00 |
| 17 | தண்ணீரூற்று கோழி இறைச்சிக்கடை | 2,000.00 | 78,000.00 | 2,700.00 | 2,597,210.00 |
| 18 | தண்ணீரூற்று ஆட்டிறைச்சிக்கடை | 2,000.00 | 12,500.00 | 2,700.00 | 413,424.00 |
| 19 | தண்ணீரூற்று கருவாட்டுக்கடை | 2,000.00 | 1,000.00 | 2,700.00 | 28,051.10 |
| 20 | கேப்பாபிலவு கோழி இறைச்சிக்கடை | 2,000.00 | 200.00 | 1,500.00 | 4,950.00 |
| 21 | கேப்பாபிலவு மாட்டிறைச்சிக்கடை | 2,000.00 | 4,000.00 | 1,500.00 | 132,000.00 |
| 22 | வற்றாப்பளை கோழி இறைச்சிக்கடை | 2,000.00 | 3,000.00 | 1,750.00 | 88,000.00 |
| 23 | தண்ணீரூற்று சந்தை வாகனத்தரிப்பிடம் | 2,000.00 | 1,200.00 | - | 39,600.00 |
| கொக்கிளாய் உப அலுவலகம் | | | | | |
| 24 | கொக்குத்தொடுவாய் பொதுச்சந்தை | 2,000.00 | 100.00 | - | 3,300.00 |
| 25 | கொக்கிளாய் கோழி இறைச்சிக்கடை | 2,000.00 | 18,000.00 | 1,000.00 | 578,490.00 |
| 26 | கொக்கிளாய் மாட்டிறைச்சிக்கடை | 2,000.00 | 21,000.00 | 1,000.00 | 693,000.00 |
| முள்ளிவாய்க்கால் உப அலுவலகம் | | | | | |
| 27 | முள்ளிவாய்க்கால் பொதுச்சந்தை | 2,000.00 | 100.00 | - | 3,118.50 |
| 28 | முள்ளிவாய்க்கால் கோழி இறைச்சிக்கடை | 2,000.00 | 150.00 | 1,000.00 | 4,400.00 |
| 29 | முள்ளிவாய்க்கால் மாட்டிறைச்சிக்கடை | 2,000.00 | 3,500.00 | 1,000.00 | 113,850.00 |
| 30 | புதுமாத்தளன் மாட்டிறைச்சிக்கடை | 2,000.00 | 1,500.00 | - | 45,054.90 |
| செம்மலை உப அலுவலகம் | | | | | |
| 31 | அளம்பில் பொதுச்சந்தை | 2,000.00 | 400.00 | - | 12,100.00 |
| 32 | குமுழமுனை பொதுச்சந்தை | 2,000.00 | 7,000.00 | - | 231,000.00 |
| 33 | செம்மலை பொதுச்சந்தை | 2,000.00 | 800.00 | - | 25,850.00 |
| 34 | அளம்பில் மாட்டிறைச்சிக்கடை | 2,000.00 | 13,000.00 | 2,000.00 | 432,362.70 |
| 35 | குமுழமுனை மாட்டிறைச்சிக்கடை | 2,000.00 | 4,500.00 | 1,750.00 | 136,902.70 |
| 36 | குமுழமுனை கோழி இறைச்சிக்கடை | 2,000.00 | 1,500.00 | 1,750.00 | 44,000.00 |
| 37 | செம்மலை கோழி இறைச்சிக்கடை | 2,000.00 | 300.00 | 1,000.00 | 9,900.00 |
| 38 | அளம்பில் கோழி இறைச்சிக்கடை | 2,000.00 | 1,700.00 | 2,000.00 | 56,100.00 |

செயலாளர்,
கரைதுறைப்பற்று பிரதேசசபை,
முல்லைத்தீவு.

19.10.2024

(CR 43428) A-1

# இளைஞர்களுடன் இணைந்து மாற்றம்

மன்னார், ஒக். 19

வன்னியில் இளைஞர்களுடன் இணைந்து மக்களுக்கு ஏற்றவாறு ஒரு மாற்றத்தை ஏற்படுத்தவேண்டும் என்று இலங்கைத் தமிழரசுக் கட்சியின் வேட்பாளர் செல்வராஜ் டினேசன் தெரிவித்தார். மன்னாரில் தனியார் விடுதியில் இளைஞர்களுடன் நேற்றுமுன்தினம் நடைபெற்ற பரப்புரைக் கூட்டத்திலேயே மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

வன்னியின் மாற்றம் என்ற தொனிப் பொருளில் இளைஞர்களும் இந்தத் தேர்தலில் இணையவேண்டும் என்ற ஒரு சிந்தனையில் இத் தேர்தலுக்கு நாம் முகம் கொடுக்கின்றோம். அரசியலில் இளைஞர்கள் எவ்வாறு பங்களிக்க வேண்டும் என்ற ஒரு சிந்தனையில் நாம் இங்கு ஒருமித்து கூடியிருக்கின்றோம். நான் தேர்தலுக்கு வரும்பொழுது எவரிடமும் பணத்தை எதிர்பார்த்து வரவில்லை. ஆனால் மக்களாகிய உங்களை நம்பியே நான் இதில் என்னை அர்ப்பணித்துள்ளேன். எனது கரங்கள் கறைபடிந்த கரங்கள் அல்ல. மாறாக மக்களுக்கு உதவிகள் செய்த கரங்கள். நீங்கள் எனக்கு அழைப்பு விடும்பட்சத்தில் நான் அந்த இடத்துக்கு வருகை தருவேன் - என்றார். (ஒ-60)



# முன்னணியின் பரப்புரை ஆரம்பம்

யாழ்ப்பாணம், ஒக்.19

தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியினரின் பிரசாரப் பணிகள் நேற்று வெள்ளிக்கிழமை ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

நல்லூர் பின்வீதியில் அமைந்துள்ள தியாக தீபத்தின் திருவுருவப்படத்துக்கு மாலை அணிவித்து, சுடரேற்றி வணக்கம் செலுத்திய பின்னர் பிரசார நடவடிக்கைகளை ஆரம்பித்தனர்.

தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் பொதுச் செயலாளர் செல்வராஜா கஜேந்திரன், தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் ஊடகப் பேச்சாளர் கனகரத்தினம் சுகாஸ் உட்பட கட்சியின் உறுப்பினர்கள் மற்றும் ஆதரவாளர்கள் இந்தப் பிரசார நடவடிக்கையில் ஈடுபட்டனர். (ச-27)

# நிர்மாண மேம்பாடு மையத்தால் 7 நாள்களில் பொருத்துவீடு

வடமாகாண பொறியியலாளர் சங்கத்தின் மன்னார் கிளையின் அனுசரணையில் 21'4' x 20'4' அளவு கொண்ட கொங்கிறீட்டிலான பொருத்து வீடு ஒன்று நிர்மாண மேம்பாட்டு மையம் எனும் அரச சார்பற்ற நிறுவனத்தால் கட்டப்பட்டுள்ளது.

இதேபோன்ற பொருத்து வீடுகள் ஏற்கனவே கிளிநொச்சி மலையாளபுரத்திலும் மன்னார் நானாட்டான் பிரதேசத்திலும் அமைக்கப்பட்டுள்ளன. சகல அமைவுகளும் ஏற்றதாக இருக்கும் பட்சத்தில் ஏழு நாள்களுக்குள் இதனைக் கட்டி முடிக்கலாம் என்று நிர்மாண மேம்பாட்டு மையம் தெரிவித்துள்ளது. (ச)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மாங்கனியை விருட்சமாக்குவது மக்களின் பிரதான பொறுப்பு!

## நாடாளுமன்ற முன்னாள் உறுப்பினர் ஈ.சரவணபவன் தெரிவிப்பு



**யாழ்ப்பாணம், ஒக். 19**

**கடந்த நாடாளுமன்றத் தேர்தலின்போது இலங்கைத் தமிழரசுக் கட்சியில் போட்டியிடும் குருவிச்சையை வெட்டுங்கள் என்று மக்களிடம் கோரியிருந்தேன். மக்கள் அதைச் சரிவரச் செய்யவில்லை. அதன் விளைவு, அது முழு மரத்தையுமே விழுங்கிவிட்டது. அந்த மரத்திலிருந்து வீழ்ந்த கடைசி மாங்கனி நாங்கள். இதை விருட்சமாக்கிப் பாதுகாப்பது மக்கள் கையிலேயே இருக்கின்றது - இவ்வாறு நாடாளுமன்ற முன்னாள் உறுப்பினரும், மாம்பழச் சின்னத்தில் சுயேச்சையாகப் போட்டியிடும் சனநாயக தமிழரசுக் கூட்டமைப்பின் மூத்த வேட்பாளருமான ஈ.சரவணபவன் தெரிவித்தார்.**

யாழ்ப்பாணம் கைலாசபிள்ளையார் கோயிலுக்கு அருகிலுள்ள அவரது அலுவலகத்தில் அண்மையில் இடம்பெற்ற பத்திரிகையாளர் சந்திப்பிலேயே இந்த விடயத்தைச் சுட்டிக்காட்டினார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

2020ஆம் ஆண்டு நாடாளுமன்றத் தேர்தலின் போது இலங்கைத் தமிழரசுக் கட்சியில் நான் போட்டியிட்டேன். அப்போது பத்திரிகையாளர் சந்திப்பில் என்னிடம் ஒரு கேள்வி எழுப்பப்பட்டது. எமது கட்சியில் போட்டியிடும் ஒரு வேட்பாளரின் பெயரைக் குறிப்பிட்டு அவர் தமிழீழ விடுதலைப் புலிகளுக்கு எதிராக கருத்துகளை முன்வைக்கின்றார். தமிழ்த் தேசிய நீக்கத்தில் ஈடுபடுகின்றார். பின்னர் எப்படி உங்கள் கட்சிக்கு மக்கள் வாக்களிப்பது என்று கேட்டார்கள். நான் அவர்களுக்குத் தெளிவான பதிலை வழங்கினேன். மரத்தில் குருவிச்சை இருந்தால் குருவிச்சையைத் தான் வெட்டவேண்டுமே தவிர. மரத்தையல்ல என்று பதிலளித்தேன். தமிழரசுக் கட்சி என்ற மரத்திலிருந்த குருவிச்சையை வெட்டச் சொல்லி கடந்த தேர்தலில் மக்களிடம் கோரினேன். மக்கள் அதைச் செய்யத் தவறி விட்டார்கள். எப்போதும் அசலை விட நகல் நல்லது போன்றுதான் தெரியும். அதனால்தான் என்னவோ மக்கள் குருவிச்சையை சரியாக அடையாளம் காணத் தவறிவிட்டார்கள். அதனால் இன்று அந்தக் குருவிச்சை மரத்தையே விழுங்கிவிட்டது. மரம் இருந்த தடம் தெரியாமல் குருவிச்சையே வியாபித்து நிற்கின்றது. அந்த மரத்திலிருந்து வீழ்ந்த கடைசி மாங்கனியே நாங்கள். இந்த மாங்கனி தமிழ் மக்கள் விரும்பும் மாற்றத்துக்கான விதையை வைத்திருக்கின்றது. இதை விருட்சமாக்க வேண்டியது மக்கள் பொறுப்பு - என்றார். (ம-125)

## வேடுவ சமூகத்துக்கும் பிரதிநிதித்துவம் தேவை

கொழும்பு, ஒக். 19

தமது சமூகத்தின் நலன்களைப்பற்றி எடுத்துரைப்பதற்கு தமது சமூகத்துக்கு நாடாளுமன்றப் பிரதிநிதித்துவம் தேவை என வேடுவத் தலைவர் உருவருகே வன்னிலா அத்தோ தெரிவித்துள்ளார். உங்களது பிரதிநிதி ஒருவரை தேர்தலில் நிறுத்துவதற்கு அரசியல் கட்சிகள் உங்களை அணுகவில்லையா என்று அவரிடம் எழுப்பப்பட்ட கேள்விக்கு, எமது சமூகத்தின் சார்பில் போட்டியிட எவரும் முன்வரவில்லை. அதற்காக அரசியல் கட்சிகளை குறைசொல்லி பிரயோசன மில்லை என்றும் குறிப்பிட்ட அவர், தமது சமூகத்தின் நலன்களைப் பற்றிக் கதைப்பதற்கு நாடாளுமன்ற பிரதிநிதித்துவம் அவசியம் எனவும் அவர் தெரிவித்துள்ளார். (ஒ-6)

## படகு உரிமையாளர்களுக்கே எரிபொருள் மானியம்



கொழும்பு, ஒக்.19 மீனவர்களுக்கு வழங்கப்படவுள்ள டீசல், மண்ணெண்ணெய் மானியம் படகு உரிமையாளர்களுக்கே வழங்கப்படவுள்ளது.

படகு உரிமையாளர்கள் இந்த மானியத்தை மீனவ சமூகத்தினருடன் பகிர்ந்துகொள்ளவேண்டும் என மீன்பிடி அமைச்சு தெரிவித்துள்ளது.

மீன்பிடிப் படகுகளுக்காக ஆறு மாத காலத்துக்கு மாதாந்தம் ஐம்பதாயிரம் ரூபா மானியமாக வழங்கப்படவுள்ளது. ஒரு லீற்றர் டீசல் 25 ரூபா குறைவாகவும் , ஒரு லீற்றர் மண்ணெண்ணெய் 150 ரூபாவுக்கும் வழங்கப்படவுள்ளது. (ச-25, 6)

## 2000 பன்றிகள் வைரஸால் சாவு

பன்றிகள் மத்தியில் பரவி வரும் தொற்றுநோயின் தாக்கமானது, கட்டுப்பாட்டை மீறி நாடளாவிய ரீதியில் வேகமாகப் பரவி வருவதாகத் தெரிவிக்கப்படுகிறது. இதுவரை 2000 பன்றிகள் உயிரிழந்துள்ளதாகக் கூறப்படுகிறது. அநுராதபுரம் மத்திய மாகாண பிரதேச செயலகப் பிரிவுக்குட்பட்ட உளுக்குளம் பகுதியில் கண்டறியப்பட்ட குறித்த வைரஸ் தாக்கம் தற்போது அநேகமான பகுதிகளுக்கு பரவியுள்ளதாக பண்ணையாளர்கள் தெரிவித்துள்ளனர். பன்றிகள் அதிக அளவில் உயிரிழப்பதால், சில பண்ணைகளில் பெரும் இழப்பீடு ஏற்பட்டுள்ளதாகவும் விவசாயிகள் தெரிவித்துள்ளனர்.

## சீஷெல்ஸ் சட்டமா அதிபராக இலங்கையர் பதவியேற்பு

கொழும்பு , ஒக்.19



சீஷெல்ஸின் புதிய சட்டமா அதிபராக இலங்கையைச் சேர்ந்த வின்செண்ட் பெரேரா பதவிப் பிரமாணம் செய்துகொண்டுள்ளார்.

இலங்கையில் பிறந்த வின்செண்ட் பெரேரா, கொழும்பு பல்கலைக்கழகத்தில் சட்டப் பட்டம் பெற்று உயர் நீதிமன்றத்தில் சட்டத்தரணியாகவும் பணியாற்றியுள்ளார்.

இதற்கு மேலதிகமாக அவர் பிஜியில் சட்டத்தரணியாகவும், மன்றாடியார் நாயகமாகவும் பணியாற்றியுள்ளதுடன், சிங்கப்பூரில் உள்ள மத்தியஸ்த மையத்தில் அங்கீகாரம் பெற்ற மத்தியஸ்தராகவும் தகுதி பெற்றுள்ளார். (ச)



## தினம் தெரியுமோ?

**வெள்ளம் வரமுதல் அணை கட்டுற பழக்கம் தமிழாக்களின்ர பரம்பரையிலேயே இல்லை. எப்பவும் வீட்டுக்குள்ள வெள்ளம் பூந்த பிறகு தான் மண்வெட்டி, பிக்கானோட வெளிக்கிடுவம். அதுக்குள்ள வெள்ளம் எல்லாத்தையும் கொண்டு போடும். அதேமாதிரி 'கடலைக் கடக்கிறதுக்கு கட்டின சங்குப்பிட்டிப் பாலம் கறள் பிடிச்சுப் பழுதாகிக்கொண்டு வருகுது. அதைத் திருத்துங்கோ' எண்டு எல்லாரும் கத்திக் குழறேக்க, காதைப் பொத்திக்கொண்டு 'அதெல்லாம் எங்களுக்குத் தெரியும், கடல்காத்துக்கு பாலத்தில கறள் பிடிக்கேலை, பெயின்ற் தான் கலர் மாறிட்டுது' எண்டு சொல்லி, சில்வர் பெயின்ரால பூசி வீதி அபிவிருத்தி அதிகாரசபை பூசி மெழுகிப்போட்டுது. ஆனால் இப்ப என்னடா வெண்டால், அந்தப் பாலத்தால டிப்பர் மாதிரி கனரக வாகனங்கள் போறது ஆபத்தெண்டும், அதைத் திருத்தப்போறதாவும், மூண்டு நாளைக்கு பரந்தன் பாதையால யாழ்ப்பாணத்துக்கு போகச் சொல்லியும் அறிவிச்சிருக்கினம்.**

**சங்குப்பிட்டிப்பாலத்தால போய்வாற சாதாரண சனத்துக்கே அந்தப்பாலம் என்ன கிடையில கிடக்கெண்டு வடிவாத் தெரியும். எல்லாப்பக்கமும் கறள் பிடிச்சு, ஒண்டிரண்டு தகரப்பாலம் குறண்டிப்போய், எப்ப கீழ விழுமோ எண்டு பயம் தான் வரும். அப்பிடிப்பட்ட பாலத்துக்கு இடைக்கிடை போய் சில்வர் பெயின்ரை அடிச்சு, கறளை மறைச்சு எவ்வளவுநாள் தான் சனத்தைப் பேய்க்காட்ட ஏலும்? சரி சனத்தைத்தான் பேய்க்காட்டினாலும் கறளைப் பேய்க்காட்ட ஏலாதே. அதுக்கு இரும்பெண்டால் கரும்பு மாதிரி. அப்பிடியே அரிச்சுச் சாப்பிட்டுடுமே. உண்மையில கடலுக்கு மேல பாலம் கட்டேக்க இப்பிடி ஸ்டீலில கட்டினதே பிழையெண்டு கனபேர் சொல்லியும் மஹிந்த அரசாங்கமும், உந்தப் பாலத்துக்கு ஐடியா குடுத்த இஞ்சினியர் மாரும் தாங்கள் பிடிச்ச முயலுக்கு மூண்டு காலெண்டு நிண்டவை. சரி ஸ்டீலில பாலம் போட்டால் அதுக்கேத்தபடி பராமரிக்கவெல்லோ வேணும். அதுக்கும் பஞ்சி. எப்பவாவது வீதி அபிவிருத்தி அதிகாரசபைக்காரர் கனவு கண்டிட்டு எட்டிப்பார்த்திட்டு வருவினம். அதோட சரி.**

**இப்ப பாலம் கறையான் அரிச்சமாதிரி கறள் பாலத்தை கனக்க அரிச்சுப் போட்டுது போல. ஆனால் மூண்டு நாளைக்குள்ள அப்பிடி அரிச்சதை என்னெண்டு திருத்தப் போயினமெண்டும் தெரியேலை. இந்தமுறையும் ஏதோ 'ரெம்பறரியா' பூசிமெழுகிட்டு விடப்போயினமோ தெரியா. என்னெண்டாலும் உள்ளதைச் சொல்லிச்சினம் எண்டா சனம் நிம்மதியா அதால போய்வருமெல்லோ.**

- பட்சி

padsi@uthayan.com

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பல்கலை. ஆணைக்குழுவின் புதிய தலைவராக கபில



கொழும்பு, ஒக்.19

பல்கலைக்கழக ஆணைக் குழுவின் தலை வராக சிரேஷ்ட பேராசிரியர் கபில செனவிரத்ன நியமிக்கப் பட்டுள்ளார்.

சிரேஷ்ட பேராசிரியர் சம் பத் அமரதுங்க அண்மை யில் பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் தலைவர் பதவியிலிருந்து விலகியதை அடுத்து, சிரேஷ்ட பேராசிரியர் கபில செனவிரத்ன அந்தப் பதவிக்கு நியமிக்கப்பட்டுள்ளார்.

இவர் 2014 முதல் 2017 வரை, அறிவியல் பீடத்தின் பீடாதிபதியாகவும், பல்கலைக்கழக ஆராய்ச்சிக் குழுவின் தலைவராகவும், நெறிமுறைகள் ஆய்வுக் குழுவின் தலைவராகவும் பணியாற்றியுள்ளார். (ச)

## வாணிவிழா

யாழ்ப்பாணம், ஒக். 19

இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக்களத்தின் அனுசரணையில் ஸ்ரீல ஸ்ரீ ஆறுமுகநாவலர் சுற்கைகள் நிலையமும் ஆறுமுகநாவலர் அறநெறிப் பாடசாலையும் இணைந்து நடத்தும் வாணிவிழா இன்று சனிக்கிழமை காலை 9.30 மணிக்கு இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக்களப் பணிப்பாளர் ய. அநிருத்தனன் தலைமையில் இடம்பெறவுள்ளது.

நல்லை திருஞானசம்பந்தர் ஆதீன முதல்வர் இரண்டாவது குருமகா சந்நிதானம் ஸ்ரீல ஸ்ரீ சோமசுந்தர தேசிக ஞானசம்பந்த பரமாசார்ய சுவாமிகள் திருமுன்னிலை வகிக்க வேதாந்தமடம் ஸ்ரீ சிவகுருநாதக் குருபீட எட்டாவது குருபீடாதிபதி ஸ்ரீ வேதவித்தியாசாகரர் சுவாமிகள் ஆசியுரை வழங்க, வேலணைப் பிரதேச உதவிப் பிரதேச செயலாளர் கணேசமூர்த்தி பார்த்தீபன் பிரதம அதிதியாக கலந்து சிறப்பிக்கவுள்ளார். மாணவர்களின் கலை நிகழ்வுகள், ஆசியுரை, தலைமையுரை, பிரதம விருந்தினர் உரையை அடுத்து மாணவர்களுக்குப் பாராட்டுப் பரிசில்கள் வழங்கப்படவுள்ளன. (ச)

## இரத்ததான முகாம்

யாழ்ப்பாணம், ஒக்.19

பகவான் ஸ்ரீசத்ய சாயி பாபாவின் 99ஆவது அவதார தினத்தை முன்னிட்டு இரத்த தான முகாம் சேர்.பொன் இராம நாதன்வீதியிலுள்ள பகவான் ஸ்ரீசத்ய சாயி சேவா நிலையத்தில் நாளை ஞாயிற்றுக்கிழமை காலை 8.30 தொடக்கம் பி.ப. 12.30 மணி வரை நடைபெறவுள்ளது. (ச-45)

## மணமகன் தேவை

V-1994.SEP மூலம் நட்சத்திரம் கொழும்பில் வசிக்கும், படிப்பு aat & ACCA வேலை பார்க்கும் சிறந்த படித்த மணமகளிற்கு, நன்கு படித்த மணமகனை பெற்றோர் எதிர்பார்க்கின்றனர்.

பெ.துரைசிங்கம்

தொடர்பு: 076 942 9254

## நாகபூஷணி திருமண சேவை

வைத்தியர், பொறியியலாளர், அரச, தனியார் துறை, உள்நாட்டு, வெளிநாட்டு மணமக்கள் பல்லாயிரக் கணக்கில் எம்மிடம் உள்ளனர். மிகப் பொருத்தமான ஜாதகங்கள் உடன் தரப்பட்டு துரிதமாகத் திருமணம் நிறைவேற்றித் தரப்படும்.

**198, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்.**

(வன்னி இன் ஹோட்டலுக்கு அருகில்)

**077 138 7596, 071 999 9306**

## பொது அறிவித்தல்

**பொதுக்கூட்டமும் நிர்வாகத் தெரிவும்.**

பனிக்கன்குளம் அறிவுநதி சனசமூக நிலையத்தில் 23.10.2024 ஆம் திகதி நடைபெற இருந்த பொதுக்கூட்டமும் நிர்வாகத் தெரிவும் தவிர்க்க முடியாத காரணத்தால் பிற்போடப் பட்டுள்ளது. பொதுக்கூட்டம் தொடர்பான அறிவித்தல் பின்னர் அறியத்தரப்படும்.

செயலாளர்

புதுக்குடியிருப்பு பிரதேசசபை.

## காணி விற்பனைக்கு

சாவகச்சேரி நகர்ப் பகுதியில் சாவகச்சேரி பஸ் நிலையத்தில் இருந்து ஏறத்தாழ 100 m தொலைவில் 4.5 பரப்பு காணி விற்பனைக்குண்டு. வர்த்தகர்களுக்கும் வீடு கட்டுவதற்கும் உகந்த நிலப்பரப் பாகும். முகவர்கள் தேவையில்லை

பி.ப. 4.00 மணிக்குப் பின் தொடர்புகளை மேற்கொள்ளலாம்.

தொடர்பு: 075 777 1885

## தவறிவிட்டது

ஞாயிறு 13.10.2024 பி.ப திருநெல்வேலி சந்திக்கும், யாழ் மருத்துவ பீடத்திற்கும் இடையில் 03 வீட்டுஇரும்புத்திறப்பும், 01 சிறிய திறப்பும் தவறவிடப்பட்டது. கண்டெடுத்தவர்கள் தந்துதவவும். சன்மானம் வழங்கப்படும்.

தொடர்புகளுக்கு:-

077 632 3881, 077 335 9463

## மூன்றாம் ஆண்டு நினைவஞ்சலி

பிறப்பு 21 04 1939



இறப்பு 19 10 2021

**அமரர் முத்துகுமாரு தேவகுமாரன்**


இவ்வுலகை விட்டுப் பிரிந்து
மூன்றாண்டு ஆனாலும்
உம் நினைவுகள்
எம்மை விட்டுப் பிரியவில்லை..
உங்கள் ஆத்மா சாந்தியடைய
பிரார்த்திக்கும் அன்புக்குடும்பத்தினர்...

தகவல்: குடும்பத்தினர்

30, உப்புமாவடி, தூர்காபுரம், தெல்லிப்பழை.

## மரண அறிவித்தல்

தோற்றம் 07 . 08 . 1950



மறைவு 16 . 10 . 2024

**தியாகராஜா சண்முகராஜா**

யாழ்ப்பாணம், சுண்டுக்குளியைப் பிறப்பிடமாகவும், பரிகாரிகண்டல் முருங்கனை வதிவிடமாகவும் கொண்ட தியாகராஜா சண்முகராஜா அவர்கள் கடந்த (16.10.2024) புதன்கிழமை முருங்கனில் காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற தியாகராஜா தம்பதியரின் அன்பு மகனும், காலஞ்சென்றவர்களான சிவராஜா - நவநீதம் தம்பதியரின் பாசமிகு மருமகனும், சிவஞானசோதி அவர்களின் அன்புக் கணவரும், கிருஷ்ணவேணி, சத்தியவேணி, ஜெகதீபன் ஆகியோரின் பாசமிகு தந்தையும், வள்ளிகாந்தன், ஜெயசோதிலிங்கம், தனா ஆகியோரின் மாமனாரும், லாவண்யா, ஹரீஷ், ராகவி, நிவேத், அனோஜ், காவியா, சிவானி, ஆரவி, சபரீசன் ஆகியோரின் அன்புப் பேரனும், காலஞ்சென்றவர்களான சிவஞானாம்பிகை , சிவபாலன் மற்றும் சிவஞானஈஸ்வரி, காலஞ்சென்ற சிவசிரோன்மணி, மற்றும் சிவபாலசரோஜினி, சிவானந்தநாதன், சிவனேசராசா, சிவபாலரெட்ணம், சிவதாசன், சிவஞானராசா, சிவயோகராணி, லோகநாதன், ஞானேந்திரராஜா, பாலசுப்பிரமணியம், தேவநாதன், வாசுதேவன், ரமணி, ஜெயந்தி, அமுதா, சிவஞானசுந்தரமூர்த்தி, சிவலிங்கம், சிவபாலகுமார், இந்திராதேவி, சுமதி, லோகேந்திரா ஆகியோரின் மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் பார்வைக்காக அவரது இல்லத்தில் நாளை மறுதினம் (21.10.2024) திங்கட்கிழமை வைக்கப்பட்டு பின்னர் எதிர்வரும் (23.10.2024) புதன்கிழமை பூதவுடல் தகனக்கிரியைக்காக சிறுக்கண்டல் மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும். இவ் அறிவித்தலை உற்றார் உறவினர் நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

தகவல் :
குடும்பத்தினர்


மனைவி - 076 883 9870

மகன் - 0033 068 141 8478

(CS/56481) J-1

## மரண அறிவித்தல்

தாய் மடியில் 08 . 02 . 1938



காலன் அடியில் 17 . 10 . 2024

**கந்தையா சோமசுந்தரம் (மனேஜர் சோமு)**

**(முன்னாள் சாவகச்சேரி பலநோக்குக் கூட்டுறவுச்சங்க நுகர்ச்சி முகாமையாளர்)**

சாவகச்சேரி வடக்கு, மீசாலையைப் பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட கந்தையா சோமசுந்தரம் (மனேஜர் சோமு) அவர்கள் நேற்றுமுன்தினம் (17.10.2024) வியாழக்கிழமை பிற்பகல் 2.00 மணியளவில் இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான கந்தையா - மீனாட்சி தம்பதியரின் அன்புப் புதல்வனும், காலஞ்சென்றவர்களான பொன்னையா - நாகம்மா தம்பதியரின் பாசமிகு மருமகனும், அன்னப்பிள்ளை அவர்களின் அன்புக் கணவரும், காலஞ்சென்றவர்களான இராசையா, வேலுப்பிள்ளை (நல்லையா) மற்றும் கனகசபை (உத்தரவுபெற்ற நில அளவையாளர்), காலஞ்சென்ற நாகராஜா, கந்தசாமி ஆகியோரின் அன்புச் சகோதரனும், நாகேஸ்வரி (பேபி), விமலாதேவி, கேமா ஆகியோரின் மைத்துனரும், மோகனதாஸ் (ஆசிரியர் - மட்டுவில் கமலாசனி வித்தியாலயம்), ரூபரஜனி (இத்தாலி), ரங்கதாஸ் (சுவிஸ்), ரூபவதனி (ஆசிரியர் மீசாலை விக்னேஸ்வரா வித்தியாலயம்), ஜெயதாஸ் (பிரான்ஸ்), யசோதாஸ் (கனடா) ஆகியோரின் பாசமிகு தந்தையும், மாலதி (அபிவிருத்தி உத்தியோகத்தர் - தென்மராட்சி கல்வி வலயம்), குகதாஸ் (இத்தாலி), தனபாக்கியம் (தனுசியா-சுவிஸ்), சிவகுமார் (பொறுப்பு தாதிய உத்தியோகத்தர்யா/ போதனா வைத்தியசாலை), பவானி (பிரான்ஸ்), பத்மசாந்தி (கனடா) ஆகியோரின் அன்பு மாமனாரும், ஆருத்திரன், அபிஷாதன், அயுஷியா, கீர்த்தனா, கார்த்தி, முகேஷ், கரிஸ், சியானி, ரிசி, சாலினி, சுலோஜிகா, கேனுஜா, லக்ஷியா, திலோஜன், கவின், பிரவீன், மதுஸ்கா, அனிஸ்கா ஆகியோரின் பேரனும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் நாளை (20.10.2024) ஞாயிற்றுக்கிழமை அன்று வேம்பிராய் பொதுமயானத்திற்கு தகனக்கிரியைக்காக நண்பகல் 12.00 மணியளவில் எடுத்துச் செல்லப்படும்.

இவ் அறிவித்தலை உற்றார் உறவினர் நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல் :
குடும்பத்தினர்

(CR/43426) J-1

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தமிழரசுக் கட்சி
# தேர்தல் அலுவலகம் மன்னாரில் திறப்பு

நாடாளுமன்றத் தேர்தலில் போட்டியிடவுள்ள தமிழரசுக் கட்சியின் மன்னார் மாவட்டத்துக்கான பிரதான கட்சி அலுவலகம் மன்னார் தாழ்வுபாடு பிரதான வீதியில் நேற்றுமுன்தினம் வியாழக்கிழமை திறந்து வைக்கப்பட்டது. தமிழரசுக் கட்சி வேட்பாளர் சட்டத்தரணி செல்வராஜ் டினேஸன் அலுவலகத்தைத் திறந்து வைத்தார்.

(ச-25, 56)



## தமிழ் மக்கள் கூட்டணி மதத்தலைவர்களிடம் ஆசி

தமிழ் மக்கள் கூட்டணியின் நாடாளுமன்றத் தேர்தல் வேட்பாளர்கள் மதத் தலைவர்களைச் சந்தித்துக் கலந்துரையாடி ஆசீர்வாதம் பெற்றுள்ளனர்.

இதற்கமைய கட்சியின் முதன்மை வேட்பாளரான மணிவண்ணண் தலைமையில் போட்டியிடும் வேட்பாளர்கள் நல்லூர் ஆதீன குரு முதல்வர் மற்றும் யாழ். ஆயர் உள்ளிட்ட மதத் தலைவர்களைச் சந்தித்தனர்.

(ச-20,100)

## இளைஞன் உயிர்மாய்ப்பு

யாழ்ப்பாணம், இணுவிலில் இளைஞர் ஒருவர் தவறான முடிவெடுத்து உயிர்மாய்த்துக் கொண்டுள்ளார். இந்தச் சம்பவம் நேற்று நடந்துள்ளது.

சடலம் மீதான மரண விசாரணைகளை திடீர் மரண விசாரணை அதிகாரி ஆ. ஜெயபாலசிங்கம் மேற்கொண்டார்.

(ச-27)


# 31 ஆம் நாள் நினைவஞ்சலி



உருவாய்
22 . 07 . 1944

அருவாய்
18 . 09 . 2024

**சவுரி யேசுதாசன் (சின்னமணி)**
(முன்னாள் ஸ்ரான்லி றோட் மரினா வெல்டிங் உரிமையாளர்)

மௌனமாக நிற்கின்ற நெஞ்சங்களுக்கும்
கண்ணீரில் மூழ்கும் கண்களும்
நினைவுகளில் அழியாமல் நீ வாழ்கிறாய்
உன் நினைவுகள் செல்வத்தை விட மேலானவை
உனது பாசமும் உனது பேதமும்
நாம் இன்றும் உணர்ந்து கொண்டிருப்பதாய்த் தான்
நீ விட்டுச் சென்ற அடையாளங்கள்
எண்ணத்திலே என்றும் எரியும் தீபமாகவே
காலம் கூட உன்னை மறக்காது
நம் இதயங்களில் நீ என்றும் இருக்கும்
அன்பின் தந்தை நீ

குடும்பத்தினர்
077 143 9374

(CS 56485) V-1



WE'RE **HIRING**

**Account Assistant for Mannar District cricket Association**

**Your Job Role**

- Develop and maintain the association's websites, ensuring they are user friendly, visually appealing and optimized for performance Manage the association's social media accounts, creating and publishing content that aligns with the association.
- Stay updated with the latest trends in web development and social media
- Handling the Office emails and Follow it with respective officials
- Prepare the Official Letters.

**What you should have**

- Diploma/Degree in IT Related Field
- Minimum Two Years' experience in similar capacity
- Good knowledge in Adobe Photoshop and adobe illustrator
- Ability to work with Independently and collaboratively with the team Fluency in English and Other Local Languages
- Willingness to work extra hours When & Where Necessary

**What we offer**

- An attractive Salary will be offered to the right Candidate
- Age Below 45 and preference will be given to those who are living in the mannar surroundings

**Please register post your detailed CV together with the names and contact numbers of two non-related referees within 5 days of this advertisement to**

Mannar District cricket Association 63/7 Hospital road mannar Tp: 0779240083



# மரண அறிவித்தல்

ஓம் விராட் விஸ்ணபிரமனே நமக



பிறப்பு
05 . 05 . 1973

இறப்பு
10 . 10 . 2024

**அமரர் மகாலிங்கம் ஜெயந்தன்**

யாழ். மட்டுவிலை பிறப்பிடமாகவும் இலண்டனை (Harrow) வதிவிடமாகவும் கொண்ட மகாலிங்கம் ஜெயந்தன் அவர்கள் கடந்த 10.10.2024 வியாழக்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான வல்லிபுரம்-பாக்கியம், சின்னத்துரை-பாக்கியம் தம்பதிகளின் பேரனும் காலஞ்சென்ற மகாலிங்கம் மற்றும் தங்கரத்தினம் தம்பதியின் அன்பு மகனும் சிவலோகநாதன் காலஞ்சென்ற தனலட்சுமி தம்பதியின் இளைய மருமகனும் தாரகை (உஷா) யின் அன்புக் கணவரும் மதுனயா, காவியன் ஆகியோரின் பாசமிகு தந்தையும் ஜெயந்தி, ஜெயமோகன், ஜெயபாலன், ஜெயபாரதி, ஜெயரதி ஆகியோரின் சகோதரனும் கிருபாகரமூர்த்தி, உதயமாலினி, தர்சனா, சூரியகுமார், காலஞ்சென்ற கேமளன், மற்றும் வெண்ணிலா, பார்த்தீபன், பிரதீபன் ஆகியோரின் மைத்துனரும் சிவசங்கர், மாலிகா, கல்பனா ஆகியோரின் உடன்பிறவா சகோதரனும் ஜெயசாந், கிருஷ்ணவி, நாகவி, நாகித்யன், கிந்துஷன், மதுஷனன், நந்தனா, கவினயன், அதிரதன், ஆகியோரின் அன்பு மாமனாரும் ரம்மிஜன், கம்ஷிகன், அக்ஷயன், ஆருஷ் ஆகியோரின் பெரியப்பாவும் ஆதவன் அபினயா ஆகியோரின் சித்தப்பாவும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் லண்டனில் (Harrow) இடம்பெறும்

**குறிப்பு-** இறுதிஅஞ்சலிகள் நாளை (20.10.2024) ஞாயிற்றுக்கிழமை அன்னாரது இல்லத்தில் (மட்டுவில் சந்திரபுரம்) நடைபெறும்

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளும்படி கேட்டுக்கொள்கின்றோம்.

**மட்டுவில் வடக்கு,**
**சந்திரபுரம்**
**சாவகச்சேரி.**

**தகவல்:**
**குடும்பத்தினர்**
**077 753 5280**



# ES Printers

**உங்கள் எண்ணங்களை அச்சிட்டு வெளியிட எம்மைத் தொடர்பு கொள்ளுங்கள்**

**தேர்தல் பிரசாரங்கள் தொடர்பான சுவரொட்டிகள், துண்டுப்பிரசுரங்கள், நாட்காட்டிகள் (Pocket Calendar), பிரசாரப் பதாகைகள் (Banner), போன்றவற்றை நேர்த்தியாகவும், உரிய நேரத்திலும் உங்களுக்கு அச்சிட்டுத் தருவதற்கு நாங்கள் தயாராக உள்ளோம்.**



தொடர்புகளுக்கு:-
**ES Printers**
No: 347 Kasthuriyar Road, jaffna
070 356 7811 / 077 120 9985


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# புதைகுழி வழக்கு ஒத்திவைப்பு

மன்னாரில் கண்டுபிடிக்கப்பட்ட இரு வெவ்வேறு மனிதப் புதைகுழி வழக்கு மன்னார் மாவட்ட நீதி வான் நீதிமன்றில் விசாரணைக்கு எடுக்கப்பட்டபோது ஓரிரு கட்டளை பிறப்பிக்கப்பட்ட நிலையில் எதிர்வரும் நவம்பர் மாதம் 21ஆம் திகதி மீண்டும் விசாரணைக்காக ஒத்திவைக்கப்பட்டுள்ளதாக காணாமல் ஆக்கப்பட்ட உறவினர்கள் சார்பாக மன்றில் முன்னிலையாகி வரும் சட்டத்தரணி வி.எஸ்.நிரஞ்சன் தெரிவித்தார். 2013 ஆம் ஆண்டு திருக்கேதீஸ்வரத்திலிருந்து மாந்தைப் பகுதிக்கு வீதியோரமாக குடிநீர் திட்டத்துக்கு தோண்டப்பட்டபோது ஒரு புதைகுழி கண்டுபிடிக்கப்பட்டது. அதேபோன்று, 2018ஆம் ஆண்டு மன்னார் நகரில் சதொச விற்பனை நிலையத் துக்கான கட்டடம் அமைக்க முற்பட்ட போது மனித புதைகுழிப் கண்டு பிடிக்கப்பட்டது.

இவை தொடர்பான வழக்குகளே, மன்னார் மாவட்ட நீதிவான் நீதிமன்ற நீதிபதி கே.எல்.எம்.சாஜித் முன்னிலையில் விசாரணைக்கு நேற்றுமுன்தினம் எடுக்கப்பட்டது. (ஒ-60)



## கொடுப்பனவு விநியோகம்

யாழ். ஒக்.19

தென்மராட்சி பிரதேச முதியோர்களுக்கான செப்ரெம்பர் மாத முதியோர் கொடுப்பனவுகள் இன்று தொடக்கம் எதிர் வரும் 26 ஆம் திகதி வரை அந்தந்த அஞ்சல் அலுவலகங்களில் விநியோகிக்கப்படவுள்ளன. (ச-9)


## மணப்பெண் தேவை

1. புலோலி. இந்து கௌரவகுலம் (V). 1991. பரணி. PhD. Newzealand citizen மாபிள்ளைக்கு மணப்பெண் தேவை. Vegelarian விரும்பத்தக்கது. பதிவெண்-30241
2. யாழ்ப்பாணம் றோமன் கத்தோலிக்கம் குருகுலம் 0989 மூலம் Master Degree Lngineer, UK citizon மாப்பிள்ளைக்கு மணப்பெண் தேவை பதிவெண்-30117
3. வடலியடைப்பு-மாவிட்டபுரம். இந்து கௌரவகுலம் (V). 1990 விசாகம். Bsc, MBA, Consultant ஆக இருக்கும் மாப்பிள்ளைக்கு மணப்பெண் தேவை பதிவெண்-30243
4. யாழ்ப்பாணம் Town-கொக்குவில் இந்து கௌரவகுலம் (V). 1988 அனுஷம். MBBS (Jaffna) Doctor மண மாப்பிள்ளைக்கு மணபெண் லேவை. பதிவெண் 27295
5. கொக்குவில்-கந்தர்மடம். இந்து கௌரவகுலம் (V). 0992 புனர் பூசம் Bachelors of Cmputer System Engineer, Australia citizen மாப்பிள்ளைக்கு மணப்பெண் தேவை பதிவெண்-30098
6. காரைநகர். இந்து கௌரவகுலம் (V). 1986 சித்திரை. Bsc in Imormaban and Communication Technology, UK citizen மாப்பிள்ளைக்கு மணப்பெண் தேவை.-27042
7. கோப்பாய்-சுன்னாகம். இந்து கௌரவ குலம் (ஏ). 1988 பூரட்டாதி MAB, Financial Analyst, Canada citien மாப்பிள்ளைக்கு மணப்பெண் தேவை பதிவெண்-26746
8. சண்டிலிப்பாய்-தெல்லிப்பளை. இந்து கௌரவகுலம் (V), 1989 அனுஷம் B.S. and post Graduate, Human Resource Analyst ஆக இருக்கும். USA citizen மாப்பிள்ளைக்கு பெண் தேவை. பதிஸ்ண்-26598
9. கரவெட்டி இந்து கௌரகுலம் (V)) 1986 திருகோணம் BA (Hons) Accounting and Finance CIMA, UK citizen மாப்பிள்ளைக்கு மணப்பெண் தேவை. பதிவெண்-26504

077 539 3728
whatsap: 077 803 8193


## மரண அறிவித்தல்



அருட்சகோதரி
**மேரி கஸ்மீர் சூசைப்பிள்ளை தி.கு**

பெரியவிளான், இளவாலையைப் பிறப்பிடமாகவும் யாழ். திருக்குடும்ப சபையைச் சேர்ந்தவருமான அருட்சகோதரி மேரி கஸ்மீர் சூசைப்பிள்ளை தி.கு (17.10.2024) வியாழக் கிழமை இறைபதம் இணைந்துவிட்டார்.

அன்னாரின் இறுதிச் சடங்கு 19.10.2024 சனிக்கிழமை அன்று பி.ப 3.00 மணிக்கு இளவாலை திருக்குடும்பு கன்னியர் சிற்றாலயத்தில் திருப்பலி ஒப்புக்கொடுக்கப்பட்டு பின்னர், இளவாலை சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்படும்.

தகவல்:
அருட்சகோதரி தியோவ்வின் குருஸ்
மாகாணத் தலைவி

121, பிரதான வீதி
யாழ்ப்பாணம்

## மரண அறிவித்தல்



### கனகலிங்கம் சிவபாக்கியம்

மீசாலை வடக்கு, கொடிகாமத்தைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட **கனகலிங்கம் சிவபாக்கியம்** அவர்கள் நேற்று (18.10.2024) வெள்ளிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற சரவணமுத்து சிவகாமிப்பிள்ளை தம்பதியினரின் அன்பு மகளும் காலம்சென்ற சிதம்பரப்பிள்ளை இராசம்மா அவர்களின் அன்புமருமகளும் கனகலிங்கம்(K.S.K Travel சாரதி) அவர்களின் அன்பு மனைவியும் பரமேஸ்வரி, நடராசா (அமரர்), பாலசிங்கம்(அமரர்), சுப்புலட்சுமி, கமலாதேவி, பாக்கியலீலா ஆகியோரின் அன்புச் சகோதரியும் மாலினி, பிரதீபன் (K.S.K. Hardware), குகதீபன் (Luxmy Tyre Works), மைதிலி (லண்டன்), ஜெகதீபன் (லண்டன்), பரதீபன் (ஆசிரியர் மட்டுவில் கமலாசினி வித்தியாலயம்), சிந்துஜா ஆகியோரின் அன்புத் தாயாரும் ஜெகவினோதன், தேவிகா, சர்மிளா(முகாமைத்துவ சேவை உத்தியோகத்தர்), விஜயதர்சன் (லண்டன்), சர்மிளா (லண்டன்), கீர்த்தனா (ஆசிரியர்), சிவகரன் ஆகியோரின் அன்பு மாமியாரும் ஷாஜகன், டேனுஜன், றியானா, கவிஷ், லவிஸ், தம்மியா, தமிருஜா, வினுஷயன், அட்சரன், பல்லவி, ரஷ்மிகன், பிரதீக் ஷா, தஸ்விந் ஆகியோரின் பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் 20.10.2024 ஞாயிற்றுக்கிழமை அவரது இல்லத்தில் நடைபெற்று, மு.ப. 10 மணியளவில் பூதவுடல் தகனக்கிரியைக்காக வேம்பிராய் இந்துமயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

தகவல்
குடும்பத்தினர்
077 162 8280, 077 568 7562

மீசாலை வடக்கு,
கொடிகாமம்.

## மரண அறிவித்தல்



### செல்லத்துரை மேரிதாசன்

**(ஆங்கில ஆசிரியர்)**

மானிப்பாயைப் பிறப்பிடமாகவும் வட்டு. கிழக்கு சித்தன்கேணியை வசிப்பிடமாகவும் கொண்ட செல்லத்துரை மேரிதாசன் 18.10.2024 வெள்ளிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற செல்லத்துரை பொன்னம்மா தம்பதியரின் அன்புமகனும் காலஞ்சென்ற சுப்பிரமணியம் கமலாம்பிகை தம்பதியரின் பாசமிகு மருமகனும் சாரதாதேவியின் அன்புக் கணவரும் காலஞ்சென்ற கணேசமூர்த்தி மற்றும் நடராஜமூர்த்தி (கனடா) ஆகியோரின் அன்புமைத்துனரும், காலஞ்சென்ற நாகசெல்வம் மற்றும் மௌலி, அச்சன், மீரா, வர்மா, ஆரணி, சௌந்தரி ஆகியோரின் பாசமிகு தந்தையும் கேதீஸ், ஜெகன், மோகனா, லக் ஷன் ஆகியோரின் அன்பு மாமனாரும் சரணா, ரிக் ஷன், சாத்விகா, வியாசன், கேசரா, ஆராத்யா, லஹரி (லகரி) ஆகியோரின் பாசமிகு பேரனுமாவார்.

அன்னாரது இறுதிக்கிரியைகள் 20.10.2024 ஞாயிற்றுக்கிழமை ககாலை 9 மணியளவில் டச்சு வீதி சித்தன்கேணியில் உள்ள அன்னாரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக வழுக்கையாறு இந்துமயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

டச்சு வீதி,
சித்தன்கேணி

தகவல்
குடும்பத்தினர்

077 534 2344
மௌலி

077 271 3798
வர்மன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மக்கள் வாழ்க்கைச்செலவு ஸ்திரத்தன்மைக்கு குழு

## அமைச்சரவை அனுமதி

கொழும்பு, ஒக்.19

அநுரகுமார திஸாநாயக்கவால் 2022 ஆம் ஆண்டு பிரேரிக்கப்பட்ட வாழ்க்கைச்செலவு உணவு விநியோக ஸ்திரத்தன்மை பிரேரணைக்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது.

இதற்கெனக் குழுவொன்று நியமிக்கப்பட்டுள்ளது. உணவு வகைகளின் விலை அதிகரிப்பை தடுப்பதும் சீரான உணவு விநியோ கத்தை நடைமுறைப்படுத்துவதுமே இந்தக் குழுவின் நோக்கம்.

இந்தக் குழுவில் ஜனாதிபதியின் செயலாளர், பிரதமரின் செயலாளர், நிதி பொருளாதார அபிவிருத்தி திட்டமிடல் அமைச்சு, மின்சக்தி எரிசக்தி அமைச்சு, பொது நிர்வாக அமைச்சு, காணி மற்றும் கால்நடை விவசாய அமைச்சு, நீர்விநியோகம், மீன்பிடி அமைச்சு ஆகியவற்றின் செயலர்கள், உள்ளூராட்சி, தொழில் அமைச்சு ஆகியவற்றின் செயலர்கள், வர்த்தக கூட்டுறவு அமைச்சு, உணவுப்பாதுகாப்பு அமைச்சு ஆகியவற்றின் செயலர்கள், சுகாதார அமைச்சின் செயலாளர், போக்குவரத்து பெருந்தெருக்கள் மற்றும் கப்பல் துறை அமைச்சின் செயலர், பெருந்தோட்ட மற்றும் சுற்றுச்சூழல் அமைச்சின் செயலாளர் ஆகியோர் உள்வாங்கப்பட்டுள்ளனர்.

உணவுத்தட்டுப்பாடு ஏற்படாமல் பார்த்துக்கொள்வதும், உணவுப்பொருள்களின் விலையில் ஸ்திரத்தன்மையைப் பேணுவதற்கும்சம்பந்தப்பட்ட திணைக்களங்களுடன் தொடர்புகொண்டு இந்தக் குழு நடவடிக்கை எடுக்கும். (ச-6)

### நாடாளுமன்றத்...

தேர்தல்கள் திணைக்களத்தின் ஆணையாளர் ரத்நாயக்க இது தொடர்பில் தெரிவித்ததாவது:-

17ஆவது நாடாளுமன்றத் தேர்தலுக்கான அனைத்து ஏற்பாடுகளும் பூர்த்தி செய்யப்பட்டுள்ளன. இது தொடர்பான பரந்துபட்ட கலந்துரையாடல் ஒன்று முன்னெடுக்கப்பட்டுள்ளது. பொலிஸார், மாவட்டச் செயலர்கள், அரசியல் கட்சிகள் உள்ளிட்ட பல தரப்பினரும் இந்தக் கலந்துரையாடலில் பங்குபற்றியுள்ளனர். ஜனாதிபதித் தேர்தலின்போது வழங்கிய ஒத்துழைப்புப் போன்றதொரு ஒத்துழைப்பை வழங்குவதாக அவர்கள் வாக்குறுதி வழங்கியுள்ளனர். அத்துடன் வாக்கெண்ணும் பணி போன்ற விடயங்களில் விரைவில் பிறிதொரு கலந்துரையாடல் இடம்பெறும் என்றார்.

சகல அரசியல் கட்சிகளும் ஜனாதிபதித் தேர்தலின்போது வழங்கிய ஒத்துழைப்பைப்போன்று பொதுத்தேர்தலின் போதும் ஒத்துழைத்து வருவதாகவும் தேர்தல் ஆணையாளர் தெரிவித்துள்ளார். (அ-ம-6)

### காணாமலாக்...

அலுவலகத்தின் உறுப்பினர் தியாகராஜா யோகராஜா மற்றும் காணாமற்போன ஆட்கள் பற்றிய அலுவலகத்தின் நிறைவேற்றுப் பணிப்பாளர் சிரேஷ்ட சட்டத்தரணி ஜெகநாதன் தற்பரன் ஆகியோரின் தலைமையில் குறித்த விசாரணைகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன.

விசாரணைகளை மேற்கொண்ட அதிகாரிகள் தெரிவித்ததாவது:-

காணாமற்போனோர் தொடர்பில் இதுவரை 21ஆயிரத்து 630 முறைப்பாடுகள் கிடைக்கப்பெற்றுள்ளன. இவற்றில் 14 ஆயிரத்து 988 விண்ணப்பப் படிவங்கள் விசாரணைக்காக ஏற்றுக்கொள்ளப்பட்டுள்ளன. இதில் 6 ஆயிரத்து 688 விண்ணப்பப் படிவங்கள் மீதான விசாரணைகள் முடிவுறுத்தப்பட்டுள்ளன. அவற்றின் அடிப்படையில் 3 ஆயிரத்து 800 பேருக்கு தலா 2 இலட்சம் ரூபா வழங்கப்பட்டுள்ளது. இது இழப்பீடு அல்ல. மாறாக, வாழ்வாதார மேம்படுத்தலுக்காகவே இந்தக் கொடுப்பனவுகள் வழங்கப்பட்டுள்ளன. அத்துடன் 3 ஆயிரத்துக்கும் மேற்பட்டவர்களுக்கு காணாமலாக்கப்பட்டமை தொடர்பான சான்றிதழ்கள் வழங்கப்படவுள்ளன. அத்துடன், 830 விண்ணப்பப் படிவங்கள் மீது தொடர் விசாரணைகள் நடத்தப்படவுள்ளன - என்றார். (அ-ம-113)

### சிசுவொன்று...

தெரியவராத நிலையில், மாதிரிகள் கொழும்புக்கு அனுப்பப்பட்டுள்ளன. இறப்பு விசாரணைகளை யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையின் திடீர் இறப்பு விசாரணை அதிகாரி நமச்சிவாயம் பிறேம்குமார் மேற்கொண்டார். (அ-ம-26)

### மின்சாரம்...

அனலைதீவுப் பகுதியில் உள்ள கோவில் ஒன்றிலேயே இந்த அசம்பாவிதம் இடம்பெற்றுள்ளது. பூஜைக்காக ஒலிபெருக்கிச் சாதனத்தை இயக்குவதற்காகச் சென்றபோதே இந்த அசம்பாவிதம் ஏற்பட்டுள்ளதாக பொலிஸாரிடம் தெரிவிக்கப்பட்டுள்ளது. (அ-ம26-9)

### மதுபான...

பொதுமக்களும் சிவில் அமைப்புகளும் இணைந்து இந்தப் போராட்டத்தை முன்னெடுத்துள்ளனர். முல்லையடியில் இருந்து பச்சிலைப்பள்ளி பிரதேசசெயலகம் வரை பேரணியாகச் சென்ற மக்கள், தங்களின் கோரிக்கை அடங்கிய மனுவை பிரதேச செயலரிடம் கையளித்தனர். (அ-ம-113)

### பனை...

இது தொடர்பில் யாழ்ப்பாணம் மாவட்ட பனை அபிவிருத்திச்சபையின் உறுப்பினர்கள் விடுத்துள்ள கூட்டறிக்கையின் சாராம்சமாவது:-

பனை அபிவிருத்திச்சபைக்குப் புதிய தலைவராக ரேனியஸ் செல்வின் நியமிக்கப்பட்டுள்ளமை சிறப்பான விடயமாகும். ரேனியஸ் செல்வின் மிகவும் அர்ப்பணிப்பான, ஊழலற்ற, வினைத்திறனான, துறைசார் அறிவுடைய அதிகாரி. அவர் நியமிக்கப்பட்டமைக்காக நாம் மிகுந்த மகிழ்ச்சியடைகின்றோம்.

ஆனால், ஊடகங்கள் சிலவற்றில், பனை அபிவிருத்திச்சபைக்குப் புதிய தலைவராக ரேனியஸ் செல்வின் நியமிக்கப்பட்டமைக்கு அதன் பணியாளர்கள் அதிருப்தியில் உள்ளனர் என்று ஒரு செய்தி வெளியிடப்பட்டுள்ளது. இந்தச் செய்தி முழுவதும் பொய்யானதும் புனையப்பட்டதுமா[illegible] இந்த நியமனத்தால் [illegible] சிலர் தங்களின் ஊழல் மோசடிகள் வெளிவருமோ என்ற கலக்கத்தில் உள்ளனர். அவர்களுக்கு இந்த நியமனம் சில பிரச்சினைகளை ஏற்படுத்தலாம். எனினும் பணியாளர்களுக்கு அவ்வாறல்ல என்றுள்ளது. (அ-ம)

### பல்கலைக்கழக...

மூலம் யாழ். பல்கலைக்கழக மருத்துவ பீடத்தில் கற்று வெளியேறியோரில் மானியங்கள் ஆணைக்குழுவுக்குத் தெரிவு செய்யப்பட்ட முதலாமவர் என்ற பெருமையை மருத்துவக் கலாநிதி பேராசிரியர் சுப்பிரமணியம் ரவிராஜ் பெற்றுள்ளார்.

1985ஆம் ஆண்டு முதல் தற்போது வரை யாழ்ப்பாண போதனா மருத்துவமனையில் மகத்தான மருத்துவசேவை ஆற்றிவரும் இவர் யுத்தகாலத்தில் பல்வேறு நெருக்கடிகள், ஆபத்துகளுக்கு மத்தியிலும் மக்களுக்குச் சிறப்பான மருத்துவசேவையை ஆற்றி வந்துள்ளார். அத்துடன் யாழ்ப்பாண மரபுரிமை மையத்தின் உபதலைவராகவும் இவர் தற்போது பதவி வகித்து வருகின்றமை இங்கு குறிப்பிடத்தக்கது. (அ-ம-66)

### மகாஜன...

யாழ்ப்பாணம் மகாஜனக் கல்லூரி மாணவன் ச. துஷாந்தன் 20 வயதுப் பிரிவில் 4.30அடி உயரம் பாய்ந்து முதலாம் இடத்தைப் பெற்றுச் சாதனை படைத்துள்ளார். (அ-ச)

### மக்களுக்கு...

திருத்தல் பணிகளுக்காக நேற்று, இன்று, நாளை என மூன்று தினங்கள் சங்குப்பிட்டிப் பாலத்தின் ஊடாக கனரக வாகனங்கள் பயணிப்பதற்கு தடை விதிக்கப்பட்டுள்ள நிலையில் டிப்பர்கள் எவ்வாறு பயணித்தன? என்றும் பொதுமக்கள் கேள்வி எழுப்பியுள்ளனர்.

பாலத்தை அண்மித்த பகுதிகளில் உள்ள இராணுவ, பொலிஸ் கூட்டுச் சோதனைச் சாவடிகளிலும் டிப்பர்கள் தடுத்து நிறுத்தப்படாமல் தொடர்ந்து பயணிக்க அனுமதிக்கப்பட்டுள்ளன. இதற்கும் பொதுமக்கள் தமது அதிருப்தியைத் தெரிவித்துள்ளனர். பாலத்தின் ஊடாக பேருந்துகள் பயணித்தால் அசம்பாவிதங்கள் ஏற்படலாம் என்ற அச்சம் காரணமாக, பேருந்துகளில் இருந்து பயணிகள் இறக்கிவிடப்பட்டே பேருந்துகள் நேற்றுப் பாலத்தைக் கடக்க அனுமதிக்கப்பட்டன. இவ்வாறிருக்கையில் டிப்பர்களை அனுமதித்தமையானது பொறுப்பற்ற செயல் என்றும் சிவில் செயற்பாட்டாளர்கள் சுட்டிக்காட்டியுள்ளனர். (அ-ம)

### வன்னி...

வலுவற்றதாக்குமாறு கோரியே இந்த மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

அனைத்து ஆவணங்களும் முறையாக முன்வைக்கப்பட்டிருந்த போதிலும், தமது வேட்புமனு நிராகரிக்கப்பட்டமை சட்டத்துக்கு முரணானது என்பதால் அந்தத் தீர்மானத்தை வலுவற்றதாக்கும் ரிட் எழுத்தாணையைப் பிறப்பிக்குமாறும் மனுதாரர்கள் கோரியுள்ளனர்.

அத்துடன், மனு மீதான விசாரணைகள் நிறைவடையும் வரை வன்னி மாவட்டத்தில் தேர்தலை இடைநிறுத்தும் உத்தரவைப் பிறப்பிக்குமாறும் மனுதாரர்கள் கோரியுள்ளனர். தேர்தல்கள் ஆணைக்குழுவின் தவிசாளர் மற்றும் உறுப்பினர்கள், வன்னி மாவட்ட தெரிவத்தாட்சி அதிகாரி உள்ளிட்ட சிலர் இந்த மனுவின் பிரதிவாதிகளாகப் பெயரிடப்பட்டுள்ளனர். (அ-ம-18-110)

### சிறப்புத்...

விசேடதேவையுடைய வாக்காளர்களின் உதவியாளர்கள் 18 வயதைப் பூர்த்தி செய்த ஒருவராக இருத்தல்வேண்டும் என்பதோடு தேர்தலில் போட்டியிடும் வேட்பாளர் அல்லாதவராக இருத்தல் வேண்டும்.

மேலும், விசேட தேவையுடைய வாக்காளர்களின் உதவியாளர்கள், தேர்தலில் போட்டியிடும் வேட்பாளர் ஒருவரின் அதிகாரமளிக்கப்பட்ட முகவராகவோ, பிரதேச முகவராகவோ அல்லது வாக்கெடுப்பு நிலையத்தின் முகவராகவோ இருத்தல் கூடாது. விசேட தேவையுடைய வாக்காளர்கள் தங்களது உதவியாளர்களை உடனழைத்துச் செல்வதற்குத் தகுதிச் சான்றிதழ் ஒன்றைப் பெற்றுக் கொள்ளவேண்டும்.

இந்த தகுதிச் சான்றிதழுக்கான விண்ணப்பங்களை மாவட்ட தேர்தல் அலுவலகங்களில், பிரதேச செயலகங்களில், கிராம அலுவலர் அலுவலகங்களில் அல்லது www.election.gov.lk என்ற இணையத்தளத்தின் ஊடாகப் பெற்றுக்கொள்ளமுடியும் - என்றுள்ளது. (அ-ம)

காணி விற்பனைக்கு உண்டு
➤ யாழ்ப்பாணம் கைதடியில் 30 பரப்பு காணி விற்பனைக்கு உண்டு A9 வீதி முகப்புடன் 2 பரப்பாக பிரிக்கப்பட்ட நிலையில்
➤ பார்வையிடும் நேரம் காலை 6.00 - மாலை 6.00
➤ தரகர் தேவையில்லை
➤ 20 அடி பாதையுடன்
தொடர்புகளுக்கு:
070 168 3354, 070 668 3354

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# தமிழ் மக்கள் கூட்டமைப்பு விஞ்ஞாபனம் வெளியீடு



யாழ்ப்பாணம், ஒக்.19

யாழ்ப்பாணப் பல்கலைக்கழக மாணவர் ஒன்றிய முன்னாள் தலைவர் கிருஷ்ணமீனன் தலைமையில் சுயேச்சையாக களமிறங்கும் தமிழ் மக்கள் கூட்டமைப்பின் தேர்தல் விஞ்ஞாபன வெளியீடு நேற்று இடம்பெற்றது. உரும்பிராயில் உள்ள பொன். சிவகுமாரனின் சிலைக்கு அஞ்சலி செலுத்தி தேர்தல் விஞ்ஞாபனத்தின் முதல் பிரதியினை பொன்.சிவகுமாரனின் சகோதரியிடம் வழங்கி வைத்து பிரசாரப் பணிகளை ஆரம்பித்தனர்.

(ச-26-20)


## விவசாயிகளுக்கு



சீனாவில்(China) இருந்து நேரடியாக எம்மால் இறக்குமதி செய்யப்பட்ட 4 ஸ்ரோக் (4 STROKE) பவர் ஸ்பிறேயர் (Power sprayer) 20 லீற்றர். மெல்லிய சத்தத்துடன் நிம்மதியாக வேலை செய்ய, இலங்கையில் முதன் முறையாக அறிமுகப்படுத்துகின்றோம்.

அத்துடன்



இந்தோனேசியாவில் இருந்து நேரடியாக எம்மால் இறக்குமதி செய்யப்பட்ட விவசாய மருந்து தெளிகருவி (Sprayer) 17 லீற்றர். சில்வர். பிளாஸ்டிக்காலானதும் பற்றறி இணைக்கப்பட்டதும் மற்றும் இணைக்கப்படாததும் விவசாய ஆராய்ச்சி நிலையத்தினால் (FMRC) அங்கீகாரம் அளிக்கப்பட்டதுமான தெளிகருவி இப்பொழுது எம்மிடம் உத்தரவாதத்துடன்.

"எம்மவரின் தெரிவு எமக்கே தெரியும்"

**ஆர்க். என். கம்பனி**

150, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம். 021 222 4021
A9 வீதி, எழுதுமட்டுவாழ். 070 191 3571
A9 வீதி, பரந்தன் சந்தி, பரந்தன். 021 228 2020

Hotline : 071 535 7799/ 071 973 9917



## Show Money

சகல நாடுகளுக்குமான விசாவினை உறுதிப்படுத்திக் கொள்ள குறைந்த கட்டணத்தில் வங்கி மீதி வசதிகள்

074 173 7684



## காணி விற்பனைக்கு

யாழ்ப்பாணம் - காரைநகர் நவாலி வீதி செல்லும் பாதை 50 M தூரத்தில் 16 அடி பாதையுடன் 20 பரப்புக் காணி விற்பனைக்கு உண்டு.

தொடர்பு: 077 6763 409
077 0781 359



## காணி விற்பனைக்கு உண்டு

**யாழ்பாணம் உரும்பிராய் சிவகுல வீதியில் 24 பரப்புக் காணி விற்பனைக்கு உண்டு.**

- இரண்டு பரப்பாக பிரிக்கப்பட்ட நிலையில்
- உரும்பிராய் சந்தி 300 மீற்றர் தூரம்
- நல்ல சூழல் குடியிருப்புக்கள் சூழ உள்ள பகுதி
- தரகர் தேவையில்லை
- மருதனார் மடம் உரும்பிராய் செல்லும் காபற் வீதி 150 மீற்றர் தூரம்.

தொடர்புகளுக்கு: 077 4683 354
077 2880 152

(CS 1647) A-1



## வாடகைக்கு

யாழ்.இந்துக் கல்லூரிக்கு அருகாமையில் இருவர் தங்கக் கூடியதாக வீட்டின் ஒரு பகுதி வாடகைக்கு உண்டு. சைவ உணவு சாப்பிடுபவர்கள் மட்டும் தொடர்பு கொள்ளவும்.

தொடர்பு:- 076 807 9283



VRP

**விநியோகஸ்தர் தேவை**

குருணாகல் பண்ணலவில் உற்பத்தியாகும் "Lakspring" குடிநீர் போத்தல் தயாரிப்பு நிறுவனத்தி ற்கு வடமாகாணத்திற்கான விநியோகஸ்தர் தேவை மிகவும் கவர்ச்சியான விலை வழங்கப்படும்.

தொடர்புகளுக்கு :

VR Property Developers (Pvt) Ltd
Kasiwatha, Hunuwila, Daraluwa
info@vrpcom.net
+94 77 227 3961

(CS/56477) J-1



பதிவுகள் ஆரம்பமாகிவிட்டன

அமெரிக்க லொத்தர் இலவச விசா

காத்திருக்காமல் உடனே பதியுங்கள்

2026ல் நீங்களும் அமெரிக்காவில்

18 வயதிற்கு மேற்பட்ட யாரும் தனியாக விண்ணப்பிக்கலாம்

இலவசமாக குடும்பத்துடன் நிரந்தரமாக அமெரிக்காவில் குடியேற இரண்டு வாய்ப்புக்கள்

இந்த வருடம் எடுக்கிறவர்களும் விண்ணப்பிக்கலாம் A/L

V2 Travels
0768226244



# ANIVESARY DAY CELEBRATION

## வீனஸ் விசேட வைத்தியசாலை

## ஆரம்பிக்கப்பட்ட பொன்னான நினைவு நாள்




அன்றிலிருந்து தனது நிறைவான மருத்துவ சேவையை வழங்கிட உறுதுணையாய் இருந்த மதிப்பிற்குரிய வைத்திய நிபுணர்கள், வைத்தியர்கள் மற்றும் வைத்திய சேவை பணியாளர்கள் அனைவருக்கும் இந்த பொன்னான நாளில் நன்றி தெரிவிக்கின்றோம்.

நாடிவரும் நோயாளர்கட்கு நிறைவான சேவையை வழங்க வீனஸ் விசேட வைத்திய சாலை 24 மணிநேரமும் தயார் நிலையில் உள்ளது என்பதை பெருமையுடன் அறியத்தருகின்றோம்.

இந்நன்னாளில் எமது மருத்துவ மனையில் உயிர்காக்கும் உன்னத தானமாகிய இரத்த தானம் எமது வைத்தியசாலை பணியாளர்களால் யாழ் போதனா வைத்திய சாலைக்கு வழங்கப்படும்.

**இந்நிகழ்வை சிறப்பிக்குமுகமாக**

- பிள்ளையார் பூஜை
- கொடியேற்றல்
- விளக்கேற்றல்
- இரத்ததான முகாம்

**இந்நிகழ்வின் பிரதம விருந்தினராக**

இளைப்பாறிய மாவட்ட நீதிபதியும், இலங்கை சத்தியசாயி நிறுவனங்களின் பிரதி இணைப்பாளருமான திரு. R. வசந்தசேனன் அவர்கள் கலந்து சிறப்பிக்கவுள்ளார்.

இந்நிகழ்வுகள் அனைத்தும் இறைவழிபாட்டுடன் ஆரம்பமாகி எமது வைத்தியசாலை பணிப்பாளர் தலைமையில் நடைபெறும்.

எமக்கு பல வருடங்களாக பேராதரவினை தரும் எமது வாடிக்கையாளரின் நலன்கருதி இன்று (19.10.2024) சனிக்கிழமை எமது வைத்திய சாலையின் OPD சனலிங் பிரிவுகளில் சிகிச்சை பெறுபவர்களுக்கு எமது வைத்திய சாலைக் கட்டணம் எதுவும் அறவிடப்படமாட்டாது என்பதை தெரியப்படுத்துகின்றோம்.

OPD சனலிங்கிற்கு வருபவர்கள் வைத்திய நிபுணரது கட்டணத்தை மட்டும் செலுத்தி சேவையைப் பெற்றுக்கொள்ளலாம்.

மேலும் சில சலுகைகளை வீனஸ் வைத்தியசாலை வழங்கவுள்ளது என்பதையும் அதற்கான விபரங்களை எமது Facebook தளத்தில் பார்வையிட்டு அறிந்து கொள்ளக்கூடியதாக இருக்கும். FaceBook ID - Venus speciality Hospital (Pvt) Ltd.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிக்கேசன் (பிறைவேற்) லிமிட்ரெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361 ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 19.10.2024 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.